விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 21 ஞாயிற்றுக்கிழமை (06.08.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 230

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து


## நோர்வேயின் விசேட தூதுவர் நேற்று யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

நோர்வேயின் விசேட சமாதானத்தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்.

நேற்றுக் காலை 10 மணிக்கு பலாலி விமானத்தளத்திற்கு வந்த அவர் யாழ்.மாவட்ட படை அதிகாரிகளுடன் தற்போதைய நிலைகள் குறித்து கலந்துரையாடினார்.

பின்னர் காலை 11.30 மணியளவில் இராணுவ பவள் வாகனப் பாதுகாப்புடன் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு வந்தடைந்த பௌயர்



சுமார் 30 நிமிடங்கள் குடாநாட்டு நிலைமைகள் குறித்து யாழ்.அரச அதிபரிடம் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின்போது சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.என்.ஜி.ஓ.பணியாளர்கள் 15 பேர் மூதூரில் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

மூதூர் நகரில் சர்வதேச அரச சார்பற்ற ஐ.என்.ஜி.ஒ.நிறுவனம் ஒன்றின் 15 பணியாளர்கள் படையினரால் சுட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று நாட்களாக இடம் பெற்ற மோதல்களையடுத்து அக்சன் பாம் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் பணியாளர்கள் மூதூரில் தமது அலுவலகத்தில் தஞ்சம் புகுந்திருந்தனர்.

மூதூர் நகரிலிருந்து விடுதலைப் புலிகள் வெளியேறிய பின்னர் நேற்று அதிகாலை குறிப்பிட்ட நிறுவனத்தின் அலுவலகத்திற்குள் புகுந்த படையினர் அங்கிருந்த நான்கு பெண் பணியாளர்கள் உட் பட 15 பேரை சுட்டுப்படுகொலை செய்ததாக அங்கிருந்து வரும் செய் திகள் தெரிவிக்கின்றன. (ந-5)

## கிளாலியில் படையினர் சூடு ஐந்து இளைஞர்கள் பலி

(தென்மராட்சி)

கிளாலிப் பகுதியில் வைத்து நேற்று இராணுவத்தினரால் ஐந்து இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களின் சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிளாலி கடற்பரப்பினூடாக யாழ்ப்பாணத்திற்குள் நுழைய முற்பட்ட விடுதலைப்புலிகளின் ஐந்து உறுப்பினர்களை நேற்று தாம் சுட்டுக் கொன்றுள்ளதாக இராணுவத்தரப்பு தெரிவித்துள்ளது. (ந)

### மக்களின் நன்மை கருதி

# கைப்பற்றிய மூதூரை புலிகள் கைவிட்டனர்

(திருகோணமலை)

**அரச படைகளுடன் மோதலில் ஈடுப்பட்டு தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த மூதூரில் இருந்து தாம் வெளியேறியுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.**

மூதூர் பகுதியில் இருந்து வெளியேறிய மக்கள் மீளவும் தமது இருப்பிடங்களுக்கு திரும்புவதற்கு வசதியாகவே தாம் அங்கிருந்து வெளியேறியுள்ளதாகவும் விடுதலைப் புலிகள் கூறியுள்ளனர்.

மூதூர் தாக்குதல்களைப் பொறுத்த வரையில் சிறிலங்காப் படைகளினுடைய அடையாளம் காணப்பட்ட நிலைகள் மீது எமது தாக்குதல்களை நாம் நடத்தியிருந்தோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பகுதிகளை நோக்கி ஒரு நகர்வு முயற்சிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை இந்த முகாம் பகுதிகளில் இருந்து படையினர் செய்து கொண்டிருந்த தன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இயல்பு வாழ்க்கைக்கு வழி ஏற்படுத்துங்கள்

### நோர்வேத் தூதரிடம் யாழ்.அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இயல்பு வாழ்க்கைக்கு வழி ஏற்படுத்துமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் நோர்வேயிடம் கோரியுள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயருடன் யாழ்.செயலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இக் கோரிக்கையை முன்வைத்தார்.

இச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த யாழ்.அரச அதிபர் ஜெனீவா முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இடம் பெற்ற வன்முறைகள் குறித்து ஜோன் ஹான்சன் பௌயரிடம் தான் புள்ளிவிபர அறிக்கை ஒன்றை சமர்ப்பித்ததாகவும் தெரிவித்தார்.

- சகல வன்முறைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
- மக்களின் நல் வாழ்வுக்கு வழி செய்யப்பட வேண்டும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கணேசமூர்த்தியின் இறுதிச்சடங்கு இன்று

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் காலை இனந் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட காங்கேசன்றை மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளரும்; தலை சிறந்த எழுத்தாளரும் , பேச்சாளருமான பொன்.கணேசமூர்த்தியின் இறுதிச் சடங்கு இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும்.

பிள்ளையார் வீதி, திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறும். (ந)

# அரச இராணுவ அழுத்தத்தை தணிக்கவே 'மூதூர்' தாக்குதல்



## புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன்

(திருகோணமலை)

மூதூரில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் நோக்கம் முற்றாக நிறைவு பெற்றுள்ளது. எமது படையணிகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தின்போதான நிலைகளில் கடமைகளை தற்போது ஆரம்பித்துள்ளன. இவ்வாறு விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், அரசின் இராணுவ அழுத்தத்தைத் தணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் மகிந்தபுர, செல்வ நகர், 64 ஆவது மைல்கல், மூதூர் இறங்குதுறைக் கடற்படை முகாம், கட்டைப்பறிச்சான் இராணுவ முகாம் மற்றும் பச்சனூர்ப் பகுதியில் உள்ள மினி முகாம்கள் என்பனவும் மூதூர் காவல் நிலையத்தோடு இணைந்திருந்த இராணுவ மினி முகாம் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

அரச கடற்படையின் இரண்டு அதிவேக டோராப் பீரங்கிப்படகுகள் மூழ்கடிக்கப்பட்டுள்ளதுடன் மூன்று டோராப் படகுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. இத்தாக்குதல்களின் போது மோட்டார்கள், இயந்திரத் துப்பாக்கிகள் உட்பட பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டுப்படுத்தப்பட்ட இந்த துரித இராணுவ நடவடிக்கையில் லெப். கேணல் குஞ்சன் (இசையமுதன்) உள்ளிட்ட 32 (10 ஆம் பக்கம் பார்க்க)

# ஆண்டவரை சரணடையுங்கள் அவர் எம்மைக் காப்பார்



மனிதவாழ்க்கையிலே நெருக்கடிகள், துன்பங்கள், வேதனைகள் மாறிமாறி வந்து அலைக் கழிக்கும் போது வேறெங்காவது போய் அந் நெருக்கடியில் இருந்து விடுபட வேண்டும் என்று நினைத்து தூர இடங்களில் உள்ள புனித தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் ஒரு நிம்மதி தோன்றுவதை அனுபவித்திருக்கிறோம்.

அவ்வாறு சென்று அங்கிருந்து எமது இடங்களுக்கு வர விருப்பம் இல்லாமல் அங்கேயே கொஞ்சக் காலம் தங்கிவிடவேண்டும் என்று பலர் கூறியதைக் கேட்டிருக்கிறோம். இவ்வாறு இயேசுவும் தம் சீடர்கள் மூவரை அழைத்துக் கொண்டு உயர்ந்த மலைப் பகுதிக்குச் சென்றார். அங்கே விண்ணகத்திலிருந்து வந்து மோசேயும், எலியாவும் அவர்களுக்கு காட்சி தந்தனர். இயேசு அப்போது தோற்றம் மாறினார். அவருடைய உடைகள் எல்லாம் தூய வெண்மையாக மாறின. கண்களைப் பறித்துவிடுவது போன்ற காட்சியை சிறிதுநேரம் அனுபவித்தார்கள் சீடர்கள் அந்தக் காட்சி யிலே தம்மை மறந்த சீடர் பேதுரு இயேசுவிடம் இயேசுவே நாம் இங்கேயே தங்கிவிடுவது நல்லது. மோட்ச மகிமையைக் கண்டுவிட்டவர் போல உணர்வு பெற்றார்.

### முயற்சியும் செயல்பாடும் வெற்றியளிக்கும்

நாம் வேலை செய்து களைத்து பின்னர் குளித்து முழுகி ஓய்வு

## பரமபிதா காட்டிய பாதை

எடுத்து நீட்டி நிமிர்ந்து படுத்தால் நிம்மதியான உறக்கம் வரும். அப்போது யாராவது வந்து குழப்பினால் அதைப் பலரால் பொறுத்துக் கொள்ளவே முடியாது. அவ்வளவு சுகம் உறக்கத்திலே உண்டாகின்றது. குறிக்கோளை நோக்கிச் செல்கின்றபோது பல சவால்கள் எம்மை வந்து குறுக்கிட்டு குழப்பும். அவற்றை எல்லாம் கண்டு பயந்து பின் வாங்குவோமாக இருந்தால் வாழ்வில் வெற்றிவாகை சூட எம்மால் முடியாது. இவ்வாறுதான் ஆன்மீக வாழ்விலும் பல சோதனைகள் குறுக்கீடுகள் வரலாம்.

தொடர்ந்து பயணிப்பதே வெற்றிக்கான வழியாகின்றது. ஒழுங்காக வேலைசெய்யும் போது பயிற்சி ஏற்படுவது போல இறைவனின் வழித்துணையோடு (செபத்தோடு) தொடரும் பயணம் குறிக்கோளை அடைய வழிவகுக்கும். விசுவாச வாழ்வுக்கு ஊட்டம் தருவது இறை உறவாகும். இறைஉறவை வளர்க்க உதவுவது செபம் என்ற ஊட்டமாகும். உறவைப் பகிர்வதும் அன்பை தொடர்வதும் அமைதி வழியை நிலைநாட்டும் செயற்பாடுகளாகும்.

### கிடைப்பதை பயனுள்ளதாக்குதல்

எம்மிடம் ஏற்படும் பலவகையான விருப்பங்கள்த ஆசைகள் எம்மைச் சிக்கலிலே மாட்டிவிட்டிருப்பதை நாம் அறிவோம்.

இயேசு தமது விருப்பங்களை அல்ல இறை சித்தத்தை நிறைவேற்றவே இவ்வுலகிற்கு வந்தேன் என்றார். நாமும் ''எமது விருப்பங்களை விட்டு விலகாவிட்டால் கடவுளின் விருப் பங்கள் எம் வாழ்வில் நுழைய இயலாது'' ஒவ்வொருநாளும் மற்றை நாளை விடச் சிறந்த நாள் நடந்து முடிந்ததை எண்ணிக் கவலைப்படாமல் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைப் பயனுள்ளதாகப் பயன்படுத்தும் போது இறை சித்தத்தை நாமும் நிறைவேற்றுகின்றவர்கள் ஆகின்றோம்.

### இறைவனை சரணடைவோம்

எதனையும் மகிழ்வுடன் பெறுவதும் நன்றியுடன் பகிர்வதும் இறைவனுக்கு விருப்பமான செயல்கள். நாம் ஒவ்வொரு காரியத்திலும் இவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். பொல்லாத இக் காலத்திலே ஆண்டவரிலே நாம் சரணடைந்து விடவேண்டும் அவரே காப்பார். எம் சித்தம் எம்மைச் சரியான வழியில் நீதியின் வழியில் நடத்திச் செல்லாது.

**யாழ். ஜெயம்தாசன்**

அடிக்கடி ஆண்டவனிடம் ஆலோசனை கேட்கவேண்டும். மனச் சாட் சிக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். ஒன்றுக்குப் பல தடவை சிந்தித்து செயல்படும் போது சீரிய காரியங்கள் செவ்வனவே நடக்க வழிபிறக்கும். □

## இராசிபலன்

**06.08.2006**
**(ஆடி 21, ஞாயிற்றுக்கிழமை)**
**துவாதசி முன்னிரவு 10.36 மணிவரை**
**மூலம் முன்னிரவு 9.48 மணிவரை**
**இராகுகாலம் 4.34-6.04 மணிவரை**
**சுபநேரம் 9.04-10.34 மணிவரை**
**அமிர்த சித்தம்**

| | |
|---|---|
| மேடம் | புதியதிட்டமிடல், தந்தைவழி உறவு, எதிர்பாராத செலவு, சரீரப்பிரயாசை. |
| இடபம் | திருடர்பயம், காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, போசன சுகம். |
| மிதுனம் | தெய்வசிந்தை, மனோதைரியம், தேக நலன், காரிய சித்தி. |
| கடகம் | மனமகிழ்ச்சி, தடைப்பட்ட காரியம் கைகூடும், தேகநலன், உறவினர் சந்திப்பு. |
| சிங்கம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம். |
| கன்னி | தன்னம்பிக்கைக் குறைவு, ரோக நிலை, பணவிரயம், முயற்சிதாமதம். |
| துலாம் | மனோ தைரியம், மாதர் நட்பு, எடுத்த கருமங்கள் கைகூடும், போசனசுகம். |
| விருச்சிகம் | குடும்பக் கவலை, பொருள் விரயம், ரோக நிலை, முயற்சிதர்மதம். |
| தனுசு | சயனசுகம், சிந்தனை மிகுதி, வெகுமானம், நல்லமுயற்சி. |
| மகரம் | சோம்பல் நிலை, அமைதிக் குறைவு, காரிய இடையூறு, சுபசெலவு. |
| கும்பம் | தனதானிய சேர்க்கை, குடும்ப சுகம், தொழில் விருத்தி, முயற்சி கைகூடும். |
| மீனம் | பிரபுத்தனம், நன்கொடை, பெரியோர் உதவி, தேகநலன். |

- வளவன்

## மூதூரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்க வழிவகுக்குமாறு ச.தே.செ.சங்கம் கோரிக்கை

மூதூரில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிப் பொருட்களை பாதுகாப்பாக எடுத்துச்செல்வதற்காக ஒரு குறிப்பிட்ட நேரத்தை வரையறுத்துக் கொடுக்க வேண்டும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இரு தரப்பிடமும் கேட்டுக்கொண்டுள்ளது.

சண்டை நீடிக்கும் நிலையில் மூதூருக்கு செல்வது ஆபத்து என்பதால் தாங்கள் அங்கு செல்ல முயலவில்லை என்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் திருகோணமலைக் குழுவின் தலைவர் இவான்டான்டன் தெரிவித்தார்.

மூதூரில் நடக்கும் சண்டையில் காயப்பட்ட பலருக்கு உரிய சிகிச்சை கிடைக்கவில்லை என்று தெரிவித்த அவர், சண்டை நீடித்தால் உணவுக்கும், மருந்துக்கும் தட்டுப்பாடு ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

தொடரும் சண்டையால் மூதூர் மக்கள் பெரும் இன்னலுக்குள்ளாகியுள்ளனர் என்றும் தேவாலயங்கள், பள்ளிக்கூடங்கள் போன்றவற்றில் தஞ்சமடைய மக்கள் முயல்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## கட்டாக்காலி நாய்களை அழிக்க நடவடிக்கை

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளை வல்வெட்டித்துறை நகர சபை மேற்கொண்டுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி இப் பிரதேசத்தில் நகர சபையால் கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படவுள்ளன. பொதுமக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறு நகரசபைச் செயலாளர் கே.அமிர்தலிங்கம் கேட்டுள்ளார்.


வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி போடாதவர்களை நகரசபை பொது சுகாதார பரிசோதகருடன் தொடர்புகொண்டு விசர்நோய்த் தடுப்பூசியைப் போட்டுகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (து-52)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பெரியாழ்வார் ஆச்சிரமத்தில்நடைபெறும். ''இராமாயண'' சொற்பொழிவுத் தொடரில் இன்று காலை 10 மணிக்கு சொல்வேந்தன் பொன். சுகந்தன் ஆன்மீகச் சொற்பொழிவாற்றவுள்ளார். (அ-35)

## நல்லூரான் திருவடிக்கு இன்று எட்டாம் திருவிழா



### தொல்லை வினை தீர்க்கும் கந்தன்

தொல்லை வினை தீர்க்கும் கந்தனே குகனே
இல்லை யெனாது வரமீந்த ருள்புரிவாய் முருகா!
கல்லை யொத்த மனமும் கசிந்துருகக் காட்சிதரும்
நல்லைக் குமரனே நல்வாழ்வருள்வாய் சரணம்!

இராசையா ஸ்ரீதரன்

### குலுங்கிடும் இன்பம் பொங்கும்



*உலகத்து உயிர்க ளுக்கே*
*உயர்ந்தநல் பற்றுக் கோடாய்*
*நலமிகு நல்லூர் தன்னில்*
*நாளெலாம் நன்றே செய்யும்*
*வலம்வரும் வடிவேல் தாளை*
*வணங்குதல் செய்யி னென்றும்*
*குலமெலாம் தழைத்து வாழ்வில்*
*குலுங்கிடும் இன்பம் பொங்கும்*

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

### தங்காதகலும் தீயவை



மங்கை பாகனார் பெற்று முகந்த
கந்தனா ரின்புறும் திருநல்லூர்
தங்கரத்தினாற் கூப்புவார்களை
தங்காதகலும் தீயவை

சிவ சண்முகவடிவேல்

### ஊழ்வினைகள் தீர்ப்பார் உவந்து

கொலைகளவு கள்காமம் சூதுவா தென்று
அலைகின்ற மக்கள் அமைதிபெற - நிலையான
வாழ்வளிக்க நல்லூரில் வாழும் பரஞ்சோதி
ஊழ்வினைகள் தீர்ப்பார் உவந்து

வேலணை சி.இராசரத்தினம்

### நீயிங்கு எமையாள வரவேண்டும்

*மயிலேறி வேலேந்தி வரவேண்டும்*
*மனமெல்லாம் உனைநாடி எழவேண்டும்*
*புயலான இருளோட்ட வரவேண்டும்*
*புது வாழ்வை தமிழருக்கு தரவேண்டும்*
*கலையான மெய்ப்பொருளே அருள்வேண்டும்*
*கதியாக எம்வாழ்வில் நீ வேண்டும்*
*நிலையான தீர்வதனைத் தரவேண்டும்*
*நீயிங்கு எமையாள வரவேண்டும்*

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

### காத்திட வாருமையா!

கலியுக வரதனே கந்தனே நின்பாத
கமலமே தஞ்ச மென்றோடி வந்தோம்-இங்கு
கலக மகன்றோடி கவினுற வாழ்வதற்கு
கடம்பனே நல்லூரானே காத்திட வாருமையா

குகதாசசர்மா சிவகுமார்
மயிலணி, சுன்னாகம்

## நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நல்லூர் உற்சவகாலஎட்டாம்நாள்நிகழ்வான 'ஆன்மீக சிந்தனையுடன் கூட்டுப் பிரார்த்தனையும்' இன்று பி.ப 3 மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வலிகாம அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் 'பேசா அனுபூதி பிறந்ததுவே' என்னும் தலைப்பில் ஸ்ரீ புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி ஆசிரியர் ச.லலீசன் சிறப்புச் சொற்பொழிவும், நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களும், கோப்பாய் வட கோவை சிவசுப்பிரமணிய கோட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களதும் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (அ-133)

# "உரிய காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும்"

## புத்தூரில் அரச அதிபர் அறிவிப்பு

வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் வாழ்வாதார உதவித் திட்டம், மற்றும் இலங்கை வங்கியின் வறுமை ஒழிப்புக் கடன் திட்டத்தின் கீழான தொழில் முயற்சிக்கான கடன் நிதி வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு புத்தூர் கிழக்கு ஸ்ரீ குமரகுருபரன் சனசமூக நிலையத்தில் வலிகிழக்கு பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது மாதர் கிராம அபிவிருத்தி சங்கச் செயலாளர் செல்வி இ.விநோதியால் அரச அதிபரிடம் மகஜரொன்று கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரில் 1047 குடும்பங்களைக் கொண்ட விவசாயக் கிராமமான புத்தூர் கிழக்கில் 838 குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இதில் 361 குடும்பங்கள் குடியிருக்க வீடுகள் அற்றன. 525 குடும்பங்களுக்கு மலசலகூட வசதி இல்லை. இவற்றை நிவர்த்தி செய்ய நிதியுதவி வழங்கப்பட வேண்டும். குளங்கள் புனரமைக்கப்பட்டு விவசாயத்தை மேற்கொள்ள வழி செய்யப்படவேண்டும். தூவல் நீர்ப்பாசன முறை அமுல்படுத்தப்பட வேண்டும். பால் சேகரிப்பு நிலையமொன்று அமைக்கப்பட வேண்டும். குடிநீர் வசதியற்ற 800 குடும்பங்களுக்கு உவர் நீர் தடுப்பணை அமைப்பதன் மூலம் நல்ல குடிநீர் கிடைக்க வழி செய்யப்பட வேண்டும்.

பொது இடங்களிலுள்ள மலசல கூடங்கள் மற்றும் கிணறுகள் புனரமைக்கப்பட வேண்டும். உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தும் வேலை வாய்ப்பின்றி இருக்கும் ஆண், பெண் இருபாலாரான 438 பேர்களுக்குத் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

வறிய மாணவர்கள் தகவல் தொழில்நுட்ப அறிவினைப் பெறுவதற்கு கணனிப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் எனவும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இம்மகஜர் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அரசாங்க அதிபர் இக்கிராமத்திலும் பார்க்க மிகப் பின்தங்கிய நிலையில் மருதங்கேணி, தீவகம், வடமராட்சி கிழக்குப் பகுதியில் ஏராளமான மக்கள் வாழ்கி றார்கள் எனவும் யாழ்.செயலகத்துக்குக் கிடைக்கும் நிதி உரிய காலத்தில், உரிய நேரத்தில் உரிய முறையில் செலவு செய்யப்படுமெனவும் அப்பொழுது இப்பிரச்சினைகள் கவனத்துக்குக்கெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார். (து-133)

# மூதூரிலிருந்து வெளியேறும் மக்களை எவரும் தடுக்கக்கூடாது - ஹக்கீம்

மூதூரில் இருந்து சண்டை காரணமாக வெளியேறும் முஸ்லிம்களை விடுதலைப் புலிகள் சில இடங்களில் தடுப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளதாக கூறும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவ்வாறு முஸ்லிம்கள் தடுக்கப்படக்கூடாது என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக மோதலில் ஈடுபடும் இரு தரப்பினருடனும் பேசுவதற்கான முயற்சிகளை தாம் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பாக நோர்வே தரப்பினரின் ஊடாக விடுதலைப் புலிகளிடம் தான் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கிளி.யிலிருந்து வந்த ஆயுதங்களைக் கைப்பற்றியதாக பென்தோட்டைப் பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

தென்பகுதியில் தாக்குதல்கள் நடத்துவதற்காக எடுத்துச் செல்லப்பட்ட வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் என்பனவற்றை பென்தோட்டைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பென்தோட்டைச் சோதனைச் சாவடியில் குறித்த வெடிபொருட்களை எடுத்துச் சென்ற பாரவூர்தி ஒன்று கைப்பற்றப்பட்டது.

இந்தப் பாரவூர்தி கிளிநொச்சியிலிருந்து வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த பாரவூர்தி திரித்துருவத்தை, தங்காவல ஆகிய இடங்களில் தங்கியுள்ள தற்கொலை போராளிகளுக்கு ஆயுதங்களை கையளிப்பதற்காகவே சென்று கொண்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பாரவூர்தியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 456 ரக துப்பாக்கிகள், சிடி ரக வெடிபொருட்கள், துப்பாக்கிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மாத்தளையில் பதிவு செய்யப்பட்ட இந்தப் பாரவூர்தி பின்னர் கிளிநொச்சிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தின் போது பாரவூர்தியின் ஓட்டுனரும், மற்றொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். (அ-9)

# மூதூர் மோதலால் 30 ஆயிரம் மக்கள் இடப்பெயர்வு

மூதூரில் ஏற்பட்டுள்ள பதற்றத்தையடுத்து இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு முன்வருமாறு மீள்குடியேற்றத்திற்கான அமைச்சர் ரிசாட் பதியுதீன் அமைப்புக்களையும், பொதுமக்களையும் கேட்டுள்ளார்.

கடந்த இரண்டு தினங்களாக மூதூர் பிரதேசத்திலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அம் மக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அரச மட்டத்தில் அம் மக்களுக்கான நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் தற்போதைய சூழ்நிலையில் பொது அமைப்புக்களினதும் பொதுமக்களினதும் அதிகப்படியான உதவிகள் தேவைப்படுகின்றது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான அவசர உதவிகளை வழங்குவதற்கு தொண்டர் அமைப்புக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மூதூர் பகுதியில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையையடுத்து 30 ஆயிரம் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதியிடமும் ஏனைய அமைப்புக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

# ஆடு, கோழிகளை வழங்க நடவடிக்கை

வடமராட்சி கிழக்கு, மணற்காடு, குடத்தனை, அம்பன் பகுதிகளிலுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக தரிசனம் அமைப்பு கோழி, ஆடுகளை வழங்கவுள்ளது.

இது சம்பந்தமான பயிற்சிகளை உலக தரிசனம் அமைப்பு வழங்கிவருகிறது.

பயிற்சியைப் பெற்ற குடும்பங்களில் 10 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக தலா 2 ஆடு வீதமும், 25 குடும்பங்களுக்கு தலா 10 நாட்டு கோழி வீதமும் வழங்கப்படவுள்ளது. (து-35)


# வங்கியாளர்களின் கண்ணீர்க் காணிக்கை



## அமரர் பொன்.கணேசமூர்த்தி

(முகாமையாளர், மக்கள் வங்கி, காங்கேசன்துறைக்கிளை)

வங்கியாளர், தொழிற்சங்க வாதி, முத்தமிழ் கலைஞர், இலக்கியப்படைப்பாளி, மனிதநேயர், சுதந்திர வேட்கையாளர், சிந்தனையாளர் என பன்முக ஆளுமை கொண்ட அமரர் பொன்.கணேசமூர்த்தி அவர்களின் ஈடுசெய்ய முடியாத இழப்பால் தவிக்கும் மக்கள் வங்கி குடும்பத்தினரது கண்ணீர்க் காணிக்கை.

அன்னாரின் ஈடுசெய்யமுடியா இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், சுற்றத்துடன் மக்கள் வங்கி குடும்பத்தினராகிய நாமும் பங்கு கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| உதவிப் பொது முகாமையாளரும், ஊழியர்களும் | - | மக்கள் வங்கி, வடபிராந்தியம். |
| பிரதேச முகாமையாளரும், ஊழியர்களும் | - | மக்கள் வங்கி, பிரதேச தலைமையலுவலகம். |
| முகாமையாளரும், ஊழியர்களும் | - | மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையும், மானிப்பாய் நீடித்த கரும பீடமும். |
| முகாமையாளரும், ஊழியர்களும் | - | மக்கள் வங்கி, காங்கேசன்துறையும், மல்லாகம் நீடித்த கரும பீடமும். |
| முகாமையாளரும், ஊழியர்களும் | - | மக்கள் வங்கி, யாழ்.பிரதான வீதிக் கிளையும், உரும்பிராய் நீடித்த கரும பீடமும். |
| முகாமையாளரும், ஊழியர்களும் | - | ஊர்காவற்றுறைக்கிளை. |
| முகாமையாளரும், ஊழியர்களும் | - | நெல்லியடிக்கிளை. |
| முகாமையாளரும், ஊழியர்களும் | - | அச்சுவேலிக்கிளை. |
| முகாமையாளரும், ஊழியர்களும் | - | சங்கானைக் கிளையும், பண்டத்தரிப்பு நடமாடும் சேவையும். |
| முகாமையாளரும், ஊழியர்களும் | - | சுன்னாகம் கிளை. |
| முகாமையாளரும், ஊழியர்களும் | - | சாவகச்சேரிக்கிளையும், கொடிகாமம் நீடித்த கருமபீடமும். |
| முகாமையாளரும், ஊழியர்களும் | - | வல்வெட்டித்துறைக்கிளை. |
| முகாமையாளரும், ஊழியர்களும் | - | யாழ்.பல்கலைக்கழகக் கிளையும், திருநெல்வேலி நீடித்த கருமபீடமும். |
| முகாமையாளரும், ஊழியர்களும் | - | யாழ்.கன்னாதிட்டிக்கிளையும், இணுவில் நீடித்த கரும பீடமும். |
| முகாமையாளரும், ஊழியர்களும் | - | பருத்தித்துறைக்கிளை. |

**மனிதத்தை நேசிப்போம், மனிதத்தைப் போற்றுவோம்
மானிட உயர் விழுமியங்களைப் பின்பற்றுவோம்.**

## அன்று ஒரு தகவல்

# இல்லறமா? துறவறமா?

மனிதர்களிலே இல்லறவாழ்வு நடத்துகிறவர்களும் உண்டு. துறவற வாழ்வு நடத்துகிறவர்களும் உண்டு. இந்த இரண்டு பேர்களிலும் யார் சிறந்தவர்கள்? இல்லத்தவரா? துறவியா?

இந்த சந்தேகம் ஒரு ராஜாவுக்கு வந்தது. ஒரு நாள் ஒரு துறவி அரண்மனைக்கு வந்தார். அவரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டார். துறவி சொன்ன பதில் என்ன தெரியுமா?

"அவரவர்கள் இடத்திலேயே அவரவர்கள் சிறப்பாக இருக்கலாம்!" என்றார்.

"பதில் புரிய வில்லையே!" என்றார் ராஜா. "என் கூட வா... புரிய வைக்கிறேன்!" என்றார் துறவி.

ராஜாவை அழைத்துக்கொண்டு இன்னொரு தேசத்துக்குப் போனார். அங்கே அரண்மனையிலே ஒரு சுயம்பரம் நடந்து கொண்டிருக்கிறது. அரச குமாரர்கள் பல பேர் அங்கு வந்து நிற்கிறார்கள். வேடிக்கை பார்க்கிற கூட்டம் வேறு...

இவர்கள் இரண்டு பேரும் கூட்டத்தோடு கூட்டமாக போய் நின்றார்கள். இவர்கள் பக்கத்தில் ஒரு இளம் சந் நியாசி நின்றார் பார்ப்பதற்கு ரொம்பவும் அழகாக இருந்தார்.

அரச குமாரி கையிலே மாலையோடு வருகிறார்... அரச குமாரர்கள் யாரையும் பிடிக்க வில்லை... நேராக வந்து இந்த இளம் சந்நியாசி கழுத்திலே மாலையைப் போடுகிறார்! உடனே அவர் "என்ன இது... நான் சந்நியாசி ... எனக்குத் திருமணமா? என்று சொல்லி மாலையைக் கழற்றி தூக்கி எறிந்து விட்டார்.

அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்... என் பெண்ணின் அழகைப் பாருங்கள்... இப்போதே பாதி ராஜ்யம் உங்களுக்குத் தருகிறேன் எனக்குப்பிறகு முழுராஜ்யமும் உங்களுக்குத் தான்" அப்படி என்றான் அந்நாட்டு அரசன்.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்... என்னை விடுங்கள்..." என்று சொல்லி அந்த இளம் சந்நியாசி அங்கேயிருந்து ஓட ஆரம்பித்தார்.

அரச குமாரியும் பின்னால் ஓடி வர... அவர்கள் பின்னால் நம்ம ராஜாவும் துறவியும் ஓடி வந்தார்கள்.

இளம் சந்நியாசி எங்கேயோ ஓடிப்போய் மறைந்து விட்டார். அரச குமாரி... ஒன்றும் புரியாமல் ஒரு மரத்தடியில் அழுது கொண்டு இருந்தார். இருட்டிப் போய் விட்டது. ராஜாவும் துறவியும் பார்த்தார்கள்....

"அம்மா கவலைப்படாதே! பொழுது விடியட்டும்... நாளைக்குக் காலையிலே உன்னை உன்னுடைய அரண்மனையிலே கொண்டுவந்து விடுகிறோம்!" என்றார்கள்.

மரத்தடியில் இவர்கள் மூன்று பேரும் வந்து ஒதுங்கி இருப்பதை... அந்த மரத்தில் இருந்த இரண்டு புறாக்களும் அதன் மூன்று குஞ்சுகளும் பார்த்தன. வந்தவர்களுக்கு சாப்பாடு கொடுக்கவேண்டாமா? என்று சொல்லி ஆண் புறா பறந்து போய் எங்கிருந்தோ சுள்ளிகளையும் நெருப்பையும் கொண்டுவந்து மரத்தடியில் போட்டது. 5 புறாக்களும் அவர்கள் முன்னால் வந்துநின்று எங்களை நீங்கள் சாப்பிடுங்கள்... உங்கள் பசியை போக்கிக் கொள்ளுங்கள ! என்றது.

இப்போது அந்தத் துறவி ராஜாவிடம் சொன்னார். தன்னுடைய உயிரைக் கொடுத்தாவது பிறருக்கு உதவி செய்கின்ற இல்லத்தவன் தான் சிறந்தவன் என்பதற்கு இந்தப் புறாக்கள் உதாரணம்.

துறவி என்றால் எதையும் உதறித்தள்ளுவான் என்பதற்கு அந்த இளம் சந்நியாசி உதாரணம். அதனாலே அவரவர்கள் இடத்தில் அவரவர்கள் சிறப்பாக இருக்கலாம்!" என்றார்.

சுவாமி விவேகானந்தர் இந்தக் கதையை சொல்லியிருக்கிறார். அதனாலே இல்லறமா... துறவறமா...என்பது முக்கியமில்லை... இல்லத்தில் இருந்து கொண்டு துறவறத்தை நினைக்கக் கூடாது.

துறவறத்திலே இருந்துகொண்டு இல்லற தர்மத்தை கடைப்பிடிக்கப்போகிறேன் என்று சொல்லிக்கொண்டு இருக்கக்கூடாது.

"எங்கள் ஊரு பெரிசா...உங்க ஊரு பெரிசா... என்று கேட்டால் எனக்கு எங்க ஊரு பெரிசு... உனக்கு உங்க ஊரு பெரிசு... என்று சொல்வோமல்லவா... அது மாதிரித் தான் இதுவும்!

சில சுயம்பரங்களிலே ....சந்நியாசி ஓடியது மாதிரி இளவரசர்களும் ஓடுவது உண்டு!

ஒரு ராஜா தன்னுடைய மகளுக்கு சுயம்பரம் நடத்தினார். பல நாட்டு அரச குமாரர்கள் வந்து சேர்ந்தார்கள் சுயம்பரம் நடக்கின்ற நாள்....

அரண்மனைக்கு உள்ளே இருந்து அரச குமாரர்கள் எல்லோரும் அலறியடித்துக்கொண்டு வெளியிலே ஓடி வந்து கொண்டு இருந்தார்கள். ஒரு பெரியவர் இதைப் பார்த்து விட்டு.... அமைச்சரை அழைத்து கேட்டார்.

"என்ன.... அந்நிய தேசத்து இளவரசர்கள் எல்லோரும் நம்ம இளவரசியை கல்யாணம் செய்ய வேண்டும் என்கிற ஆர்வத்தில் தானே வந்தார்கள் ... ஏன் இப்படி ஓடுகிறார்கள்... நம் இளவரசியை அவர்கள் பார்க்க வில்லையா? என்று கேட்டார். பார்த்ததற்கு அப்புறம் தானே இப்படி ஓடுகிறார்கள்!" அப்படி என்றார் அமைச்சர்!

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மாவிலாற்றை மீட்க சோமபுரம் ஊடாக படைநகர்வு கிராமத்தவரை வெளியேற படையினர் உத்தரவு

(திருகோணமலை)

திருகோணமலையின் தெற்குப் பகுதியில் உள்ள சோமபுர கிராமத்தில் சிங்களக் குடியிருப்பாளர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். தற்போது மாவிலாறுப் பகுதியை நோக்கி படைகளை நகர்த்த முயற்சிக்கும் படையினர் அதற்கான இன்னுமொரு திட்டமிடலாக சோமபுர கிராமத்தையும் பயன்படுத்தவுள்ளனர்.

இதற்காக சோமபுர கிராமத்தில் உள்ள ஆயிரக்கணக்கான சிங்களக் குடியிருப்பாளர்களை உடனடியாக வெளியேறி வேறு இடங்களில் தற்காலிகமாகக் குடியேறுமாறு கோரியுள்ளனர்.

மாவிலாறு அணைக்கால்வாய்ப் பகுதியை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்க சோமபுர பகுதியூடாக படைநகர்வும் தங்கள் திட்டத்தில் அடங்குவதாகக் கூறிய இராணுவ அதிகாரியொருவர் இந்தப் பகுதி மக்களை வெளியேற்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியையும் கோரியுள்ளார்.

இதற்கிடையில் மூதூர்ப் பகுதிகளிலிருந்து வெளியேறும் ஆயிரக்கணக்கான அகதிகள் கிளிவெட்டி பகுதிகளை வந்தடைவதாகவும், அங்கிருந்து அவர்களை பாதுகாப்பான பகுதிகளுக்குக் கொண்டு செல்ல ஒரு இடைக்கால யுத்த நிறுத்தத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கோரியுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஏராளமான முஸ்லிம் அகதிகள் கிளிவெட்டி மற்றும் அண்டிய பகுதிகளில் வந்து சேர்ந்தவுடன் அங்கிருந்து வெளியேற வாகன ஒழுங்குகளைக் கோரியுள்ள போதிலும் சோமபுர மற்றும் ஏனைய பகுதிகளில் பாதிக்கப் பட்ட சிங்கள மக்களை முதலில் வெளியேற்றிய பின்னர் முஸ்லிம் மக்களுக்கான வாகன ஒழுங்கு செய்து தரப் படுமென அரசதரப்பினர் கூறி வருவதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் கூறினார். (அ)

# கோப்பாய் கோட்ட ஆங்கில தினப் போட்டி முடிவுகள்

(கோப்பாய்)

அண்மையில் நடைபெற்ற கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின் விபரம்.

*பார்த்தெழுதுதல்*

(தரம் -3)1ஆம் இடம், ஜே. சஞ்சீவ் குமார் ,(அச்சுவேலி மத்தியகல்லூரி), 2ஆம் இடம், எஸ். லவண்சிகா (அச்சுவேலி சென் திரேசா மகளிர் கல்லூரி), 3ம் இடம், கே. பனு சிகா (கோப் பாய்மகா வித்தியாலயம்)

(தரம்-4) 1ஆம் இடம், ஜே மிஷாந்தன் (இடைக்காடு மகாவித்தி யாலயம்), 2ஆம் இடம், எஸ்சபீனா (கோப் பாய்மகா வித்தியாலயம்), 3 ஆம் இடம், ஆர். டினேஸ்கரணந் தா (இரா முப்பிள்ளை வித்தியாலயம்)

(தரம்-5) 1ஆம் இடம், எஸ். விந்துஜா (அச்சுவேலி சென்திரேசா மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம், பகீரதி (உரு ம்பிராய் சிவந்தமிழ் வித்தியாலயம்),3ஆம் இடம், வி .யசோதா (அத்தியார் இந்துக் கல்லூரி)

(தரம்-6)1ஆம் இடம், எஸ். உஷாளினி (புத்தூர் சோமாஸ் கந்தா கல்லூரி), 2 ஆம் இடம், எம். கஜனி (புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி), 3 ஆம் இடம், தி . நிருஷா (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியால யம்.)

(தரம்-7)1 ஆம் இடம், ஈ.விதுஷா (அச்சுவேலி மத்தியகல்லூரி), 2 ஆம் இடம், பி . துளசியா (கோப்பாய் சரவணபவனானந்தா வித்தியாலயம்) , 3 ஆம் இடம், எல். ஜூலிரோ மினா (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்)

(தரம்-8) 1ஆம் இடம், என். ஜெனுகா (புத்தூர் சோமாஸ் கந்தா கல்லூரி), 2 ஆம் இடம், தி. திலக்ஷிகா (புத்தூர் சோமாஸ் கந்தா கல்லூரி), 3 ஆம்இடம், தி. யாதுலா (ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்)

(தரம்-9) 1 ஆம் இடம், தி. தீபசாளினி (ஆவரங்கால் நடராஜர் இராமலிங்க வித்தியாலயம்), 2 ஆம் இடம், இம்.தி. மிருனா (புத்தூர் சோமாஸ் கந்தாகல்லூரி), 3 ஆம் இடம், வி. நீலவேணி (ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்)

(தரம்-10)1 ஆம் இடம், எஸ். மயூரிகா (அச்சுவேலி சென் திரேசா மகளிர் கல்லூரி) ,2 ஆம் இடம் ,தி. சுவர் ணா (புத் தூர் சோமாஸ்கந்தா கல்லூரி), 3 ஆம் இடம், தி.வினோஜினி (அச்சவேலி சென் திரேசா மகளிர் கல் லூரி)

(தரம்-11) 1 ஆம் இடம், கே .மதனகா (புத்தூர் சோமாஸ்கந்தாகல்லூரி) ,2 ஆம் இடம், எம்.கெலன் சோபியா (அச்சுவேலி சென் திரேசா மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம், ஏ. டயானி (அச்சுவேலி சென்திரேசா மகளிர் கல்லூரி)

(தரம்-12)1 ஆம் இடம் ,எம் . ஜெயமேரி (அச்சுவேலி . சென் திரேசா மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம், கே . சுபாஜினி (அத்தியார் இந்துக் கல்லூரி ), 3ஆம் இடம், சோபிகா (புத் தூர் சோமாஸ்கந்தா கல்லூரி)

(தரம்-13)1 ஆம் இடம், சி. ஜி நிரோசா (அச்சுவேலி சென் திரேசா மகளிர் கல்லூரி) , 2 ஆம்இடம், ஆர் . நிஷா (அச்சு வேலிசென் திரேசா மகளிர் கல்லூரி), 3ஆம் இடம், எம். துர்ஜா (புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி)

*சொல்வதெழுதல்.*

(தரம்-6) 1ஆம் இடம், கே. தர்சிகா (இடைக்காடு மகாவித்தியா லயம்), 2 ஆம் இடம், எம்.கஜனி (புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி) ,3 ஆம் இடம், மயூரதி (புத்தூர் சோமாஸ்கந் தா கல்லூரி)

(தரம்-7) 1ஆம் இடம், ஆர். கஸ்தூரி ராஜன் (அச்சுவேலிமத்திய கல்லூரி), 2 ஆம் இடம் ,ஆர் துளசியா (கோப் பாய் சரவணபவனணாந்த வித்தியாலயம்), 3 ஆம் இடம், தி. யசாணி (ஆவரங்கால் நடராஜா இராம லிங்கவித்தியாலயம்), (தரம்-8) 1ஆம் இடம், தி.வாசுகி (ஆவரங் கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய ம்), 2 ஆம் இடம், எஸ் . அரு ளீசன் (புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி), 3 ஆம் இடம், வி. சாருஜன் (இடைக் காடு மகா வித்தியாலயம்.

(தரம்-9)1ஆம் இடம், ஐ. இந்துசா (அச்சுவேலி சென் திரேசா மகளிர் கல்லூரி) , 2 ஆம்இடம் , கே. நிஷாந்தி (அத்தியார் இந்துக்கல்லூரி), 3 ஆம்இடம், ஆர். கௌசிகா (கோப் பாய் கிறிஸ்தவக்கல்லூரி)

(தரம்-10) 1 ஆம் இடம், ஆர் . வினோஜா (ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), 2 ஆம் இடம், ஜே. சிந்துஜா (ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), 3 ஆம் இடம், வி. தனுஜா (அச்சுவேலி சென் திரேசா மகளிர் கல்லூரி

(தரம்- 11)1 ஆம் இடம், ஜே. பாமினி (புத்தூர் சோமாஸ் கந்தா கல்லூரி), 2 ஆம் இடம், தி.கஜனி (ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்)

(தரம்-12) 1ஆம் இடம், எஸ்.தர்மினி (புத்தூர் சோமாஸ் கந்தாக் கல்லூரி) . 2ஆம் இடம் , எஸ்.சபிதா (உரும்பிராய் இந்துக்கல்லூரி), 3ஆம் இடம், ஆர்.கிருபா (அச்சு வேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி)

(தரம் -13) 1ஆம் இடம், கே.குணஜா (கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரி), 2ஆம் இடம், எம்.மயூ ரா (அச்சுவேலி மத்திய கல்லூரி), 3ஆம்இடம், யூ.சசிந்தா (அத்தியார் இந் துக் கல்லூரி.

*ஆக்கச் செயற்பாடு*

(தரம் -6) 1ஆம் இடம், ஜே.கோ பிகா (ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), 2ஆம் இடம், எஸ்.நிரோஜி (அச்சுவேலி மத்திய கல்லூரி) ,3ஆம் இடம், தி.தீபிகா (இடைக்காடு மகாவித்தியா லயம்)

(தரம்-7) 1ஆம் இடம், ஆர்.லோ கிதா (அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி), 2ஆம் இடம், தி.தனுசியா (அச்சுவேலி சென்.திரே சா மகளிர் கல்லூரி) 3ஆம் இடம், ப.சாரணி (புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி)

(தரம்- 8)1ஆம் இடம் எஸ்.அருளீசன் (புத்தூர் சோமாஸ் கந்தாக் கல்லூரி), 2ஆம் இடம், எஸ்.ஜசிந்தா (இடைக் காடு மகாவித்தியா லயம்), 3ஆம் இடம் , தி.லினுஜா (புத் தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி) , (தரம்- 9) 1ஆம் இடம், தி.சீறின் கலிஸ்ரா (அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி), 2ஆம் இடம், எல்.இந் துஜா (அச்சுவேலி சென். திரேசா மகளிர் கல்லூரி)3 ஆம் இடம் கே.நிஷாந்தி (அத்தியார் இந்துக் கல்லூரி), சி.சஜிந் தினி (அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்)

(தரம் -10)1ஆம் இடம், தி.தனு ஜா (அச்சுவேலி சென். திரேசா மகளிர் கல்லூரி), 2ஆம் இடம், ஜி.ஜசி னிஜா (அச்சுவேலி சென்.திரேசா மகளிர் கல்லூரி)3ஆம் இடம், எஸ்.மனோஜ் (கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி)

(தரம்-11)1ஆம் இடம், பி.குக நாத் (இடைக்காடு மகா வித்தியாலயம்), 2ஆம் இடம், எஸ்.நிலானி (ஆவரங் கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்), 3ஆம் இடம், பி.பிருந்தா (இடைக்காடு மகாவித் தியாலயம்), (தரம் - 12)1ஆம் இடம், வி.சுதா ஜி னி (அத்தியார் இந் துக்கல்லூரி) 2ஆம்இடம்; ஆர்.ரஜிந்தா (அத்தியார் இந் துக்கல்லூரி), 3ஆம் இடம், எஸ்.தர்மினி (புத்தூர் சோமாஸ் கந் தா கல்லூரி), தரம் -13)1ஆம் இடம், பி.சோப னா (அச்சுவேலி சென். திரேசா மகளிர் கல்லூரி), 2ஆம் இடம், தி.திலீபன் (புத் தூர் சோமாஸ்கந்தா கல்லூரி), 3ஆம் இடம், தி.விதுப்பிரியா (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி) (அ-79)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக செல்லும் வகையில் நோர்வே உதவி

கிழக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரகடனப் படுத்தப்படாத யுத்தத்தின் விளைவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவியாக 15இலட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

இந்நிதியை சர்வதேச செஞ் சிலுவைச்சங்கத்தின் ஊடாகவோ அல்லது தன்னார்வ நிறுவனங்கள் ஊடா கவோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாகச் சென்றடைய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல் ஹெய்ம் தெரிவித்துள்ளார். (அ)

# துர்க்கை அம்பாள் மஹோற்சவம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான மஹோற்சவம் இம் மாதம் 25 ஆம்திகதி வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் இடம்பெறவுள்ளது.

பிரதான உற்சவங்களாக செப் ரம்பர் 2 ஆம்திகதி சனிக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும், 4 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், 5 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தீர்த்தத் திருவிழாவும் கொடியிறக்கமும் நடைபெறும் . (அ-7)

# கனக்கக் கதைப்பம்

## ஊர் பாஷையில் ஓர் அரசியல் அலசல்

சங்கரன்

வலம்புரியில் ''ஊர்க்கிழவன்'' கதைக்கிறன் எப்படியோ என்னைக் கதைக்க விட்டுட்டியளெல்லோ! இனி நான் கனக்கத் தான் கதைக்கப்போறன். நீங்களும் கனக்கக் கதையுங்கோ. எல்லாரும் கனக்கக் கதைப்பம். முதலில் திருகோணமலைச் சண்டையைப் பற்றிக் கதைக்கிறன். உண்மையில சண்டை சச்சரவைப்பற்றிக் கதைக்கிறது ஒரு அரியண்டமான வேலை தான். தெரியும்! பி. பி.ஸி சிங்கள சேவைப் பொறுப்பாளர் லியனகே சொல்லுறார்– அதுதண்ணிச் சண்டையில்லையாம் அது தான் மாவிலாறு அணையை மூடினதாலை சிங்களச் சனத்தின்ர பயிர் வாடுது; குளிக்க, குடிக்க தண்ணீயில்லை. மனிதாபி மான நெருக்கடியைத் தீர்க்க சண்டை நடத்துறம் எண்டு அரசாங்கத்தின்ரை பாதுகாப்பு விவகாரங்களைப் பேசுற அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல சொன்னவரல்லே. எங்கட பி. பி.ஸி லியனகே சொல்லுறார்– சும்மா மேலால பார்த்தால் தண்ணீர் வாய்க்காலை புலிகள் திறக்காததல சண்டை நடக்கிற மாதிரி தெரியும்;

ஆனால் அப்படி இல்ல. இது காலம் காலமாக கறல் ஏறிக்கிடந்த பழைய் வரலாற்றுப் பிரச்சினை எண்டுதான் அவர் சொல்லுறார். அதென்ன கறல் ஏறின வரலாற்றுப் பிரச்சினை? லியனகே தொடர்ந்தும் சொல்லுறார்.

குடியேற்றங்களை காலத்துக்குக் காலம் நடத்தி, மாவட்டத்தின்ரை சனத்தொகை. அது தான் சனத்தொகை இனவிகிதாசாரம் மாறிப் போய்க்கிடக்கிறதாலே குடியேறின ஆக்கள் நிலத்தையும், தண்ணியையும் சொந்தம் கொண்டாடுகிற நிலை ஏற்பட்டது எண்டு சொல்லுறார். 3ஆம் திகதி வியாழக்கிழமை காலமை பி.பி.ஸி உலக சேவையில் லியனகே ஒரு பேட்டி குடுத்திருக்கிறார். அதில தான் இதைச் சொன்னவர்.

அவர் சொன்னதை வைச்சுக் கொண்டே நான் கனக்கக் கதைக்கிறன் எண்டு சொல்லுவியல். அவரை பி.பி.ஸி. உலக சேவைக் காரன் கேட்டான் ஒரு கேள்வி– உண்மையில் எல்லாரும் கேட்டுக்கேட்டு புளிச்ச கேள்வி.

''இன்னும் இலங்கையில் போர் நிறுத்தம் அமுலில் உள்ளதா?'' என்று கேட்டான். "கடதாசியில் எழுத்தளவில் தான் இருக்கு. நடைமுறையில் இல்லை'' எண்டு லியனகே சொன்னார். அரசாங்கத்திற்கு சர்வ தேசத்தின்ர அபிவிருத்தி உதவி தேவை ஆதரவு தேவை. போராளிகளுக்கும் சர்வதேசத்தின்ர நல்ல அபிப்பிராயம் தேவை. அதிலை இரு தரப்பாரின் எத்தரப்பாரும் தாமாக போரைப் பிரகடனப்படுத்தமாட்டினம் எண்டு தான் மனிசன் சொல்லுது. செய்தியளை வாசிக்கிற கேட்கிற சனங்களுக்கு எல்லாரும் சேர்ந்து புதுப்புதுச் சொல்லுகள் எல்லே படிப்பிக்கினம். பாருங்கோ சொல்லுகளை அடிக்கி... ....நிழல் யுத்தம், மென்யுத்தம், மென் தீவிர யுத்தம் ...: மனிதாபிமானத்திற்கான இராணுவ நடவடிக்கை...

2002 இல் ரணில் –பிரபா புரிந்துணர்வு உட்ன்பாடு போரைத் தொடங்குகிறத்துக்கு 14 நாள் அவகாசம் கொடுக்கச்சொல்லுது.... எல்லாரும் பாடமாக்கின விசயம் தானே ... இரு தரப்பாருக்கும் கட்டுப்பாட்டு பிரதேசங்கள் ஏதோவரையறுக்கப்பட்டிருக்காம்.... இதைத் தானே அரசின் இறைமை, அதிகாரம், ஆள் புலம், குடித்தொகை, வளங்கள் எல்லாம் பகிரப்பட்டதற்குச் சமம் எண்டு ஜே.வி.பி. ஆட்கள் ...கு ள றி ன வை வ . யு.என்.பி.ஆட்கள் யாதார்த்தம் அப்பிடித்தானே எண்டு பதில் சொன்னாங்கள். இந்த புரிந்துணர்வு உடன்பாடு சிங்களச் சனத்திட்டை கிளறிவிட்ட புழுதி பறக்கும் வாக்குவாதங்கள் கனக்கப்பாருங்கோ! அதற்கிடையில புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக் கால தன்னாட்சி அதிகார சபை யோசனை முன்னூறு... நானூறு நாள் "சிங்கள புத்திசீவியள்'' மத்தியில் நல்லா பிணயப்பட்டது பாருங்கோ.....2002 தொடங்கி சமாதானம், சமஸ்டி, அதிகாரப்பகிர்வு, வடக்குத் தெற்குப்பாலங்கள், மானிடங்களின் ஒன்று கூடல்கள், தோழமைப் பயணங்கள்... அதுகளுக்கு எல்லாம் முன்னுக்கு உடனடி புனர்வாழ்வு அபிவிருத்தி மேற்கொள்ள அமைக்கப்பட்டு, பிறக்கும் போதே செத்துப் பிறந்த சிரான் கட்டமைப்பு... தாய்லாந்து... நோர்வே... ஜெனீவா எண்டு நடந்து அலுத்த பேச்சுவார்த்தைகள்... அதுகளை ஒழுங்குபடுத்த கர்லுழைய வாயுழைய ஓடித்திரிந்து கதைத்துப் பேசிய எரிக் சொல் ஹெய்ம்... எத்தனை கூட்டங்கள், எத்தனை மாநாடுகள் ...செய்தியாளர் சந்திப்புக்கள்... பதவிப் பறிப்புகள், ஆட்சிக் கலைப்புக்கள், தேர்தல்கள்... கடல், தரை, வான் வழிப்போக் குவரத்துச் சர்ச்சைகள், 2ஆம் கட்ட ஜெனீவா பேச்சுக்கள் கருகிப்போனமை...

மாணவர் பேரவையை மையப்படுத்தி பரமேஸ்வராச் சந்தி அடிக்கடி கலங்கிக் குலுங்கிக்கொண்டிருந்தது. பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்டங்கள்... எங்கடை பேராசிரியர்மார் பட்ட துன்பங்கள்..அதுக்குமுன்னாலை திருகோணமலை நகரின்ரை புத்தர் சிலை விவகாரம் வன்முறையான கதை.

நாளொரு மேனியும் பொழு தொரு வண்ணமுமாக கொன்று அழிக்கப்பட்ட மனித உயிர்கள்... காணாமற்போனோர், குண்டு வெடிப்புகள், தாக்குதல்கள்... திருகோ ணமலையில் தொடங்கிய விமானத் தாக்குதல்கள்... வன்னியில நடந்த விமானத் தாக்குதல்கள்... சாவுமணி அடிச்சதுபோல –வால் மட்டும் தெரிந்தபடியிருந்த "சமாதான எலியை'' ஓட ஓட விரட்டிய ஐரோப்பிய ஒன்றியத் தடை... அதன்மூலம் எழுந்த பல்வேறு சர்ச்சைகளும் வாதங்களும் ஐரோப்பிய ஒன்றிய நாடு களின் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் வெளியேறுவதற்கு புலிகள் கொடுத்த காலக்கெடு... அவர்கள் தொடர்ந்தும் தாம் நீடிக்க விரும்பி நோர்வே ஊடாக எடுத்த முயற்சிகள்... செத்துப்போன "சமாதான....இல்'' உண்ணிகளாகக் கழண்டு கொண்டிருக்கும் டென்மார்க், பின்லாந்து கண்காணிப்பாளர்கள் கழரத் தீர்மானிக்கும் சுவீடன் கண்காணிப்பாளர்கள்... பயங்கரவாதத்துக்கு விட்டுக் கொடுத்துவிட்டதாக இந் நாடுகளை நோக்கி கர்ச்சிக்கும் ஹெகலிய ரம்புக்வெல. இல்லையென்று விளக்கம் கொடுக்கும் இந் நாடுகளின் வெளிவிவகார அதிகாரிகளின் அறிக்கைகள்...

மாவிலாறு தண்ணி தடுக்கப்பட்டமை... சிங்கள மக்கள், ஹெல உறுமய, ஜே.வி.பி காரர்களின் ஆர்ப்பாட்டங்கள் கல்லாறு, சேருநுவரப் பகுதிகளில் இடம்பெற்றமை.

அரசாங்கம் ஆரம்பித்த ''மிசன் வோட்டர் செட்'' புலிகள் நடத்திய தாக்குதல்கள்... ஒரு உக்கிர சண்டைக் களமாக உருவெடுத்த திருகோணமலை ... ஆயிரக்கணக்கான மக்கள் போரிடும் தரப்பார் மத்தியில் அக்ப்பட்ட அல்லது பாதிக்கப்பட்ட நிலை... சிங்கள், தமிழ், முஸ்லிம் மக்கள் ஒரே வேளையில் போரின் கர்ணகடூரத்தை நேரடியாக உணரும் அவலநிலை...

அதற்கிடையில் இருதரப்பும் தத்தம் பழைய நிலைகளுக்கு திரும்பி போர் நிறுத் தத்தை மதிக்க வேண்டும் என்று கேட்கும் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சரும் முன்னாள் நேரடி அனுசரணை யாளருமான எரிக் சொல்ஹெய்ம்... தொடர்ந்து முயற்சிக்கவிருக்கும் நோர்வேயின் புதிய அனுசரணையாளர் போவர்...

அதற்கு முன்னதாக போர் நிறுத்தம் செத்துக்கொண்டிருக்கிறது என்று ஒருக்கால்... மற்றொருக்கால் அது முழு அளவிலான போராக வெடிக்காது என்றும்... வேறு ஒரு நேரத்தில் ஐந்நூறு பேருக்கு மேல் சனம் செத்தால், போர் என்று கூறலாம் என்று தட்டுத் தடுமாறும் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களும்... மோதல், சண்டை, போர், யுத்தம், தாக்குதல் முதலிய தமிழ்ச் சொற் களைச் சரிவர எப்படிப் பாவிக்கிறது எண்டு தெரியாமல் தடுமாறும் இலத்திரனியல் ஊடகக் காரர்களும்....

'இப்பிடிய நிலைமை பழைய சாம்பாறு புளிச்சு நொதிச்சமாதிரிக் கிடக்குது பார்த்தியளே.

அரசு கதைக்கிறது ஒண்டு நினைக்கிறது மற்றொன்று செய்யிறது வேறை ஒண்டு. முடிய பிறகு சொல்லுறது ஏதோ ஒண்டு– இதை நீங்கள் 2002இல் இருந்து இண்டைக்கு வரைக்கும் இலங்கையின்ரை அரசியலிலும் பாதுகாப்பு நிலைமைகளிலும் வலு தெளிவாக அவதானிக்கலாம் பாருங்கோ... நான் கனக்கக் கதைச்சிட்டன் போல கிடக்கு...

போர் மேகங்கள் சூழ்ந்திட்டுது– அப்பாவிச்சனங்கள் அழியக்கூடாது... தயவுசெய்து மனிச உயிரிலை தமிழ் உயிர், சிங்கள உயிர் முஸ்லிம் உயிர் எண்டு பாகுபடுத்த ஏலாது. எல்லாம் பெறுமதிமிக்க உயிருகள் தானே...

இஸ்ரேல் கூட தெற்கு லெபனானிலும் பாலஸ் தீனத்தின்ரை காசாப் பள்ளத்தாக்கிலும் அப்பாவிச் சனத்தை குண்டு வீசி அழிக்குது. அங்கையும் அறத்துக்கு இடமில்ல.... ரீ. வியல பார்த்தன் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் –ஒரு வெள்ளெடியன் சேவல் மாதிரி மீசைக் காரன். அமெரிக்காவின்ரை கொண்டலீசா றைஸ் அம்மையாற்றை கையைப் பிடிச்சுக் கொண்டு ஏதோ சிரிச்சுக் கதைக்கிறான்... அவாவும் நல்லாச் சிரிச்சுக்கொண்டு போறா... தெற்கு லெபனானிலை அப்பாவிப் பெண்களும், குழந்தைகளும், நோயாளியளும் இஸ்ரேல் நடத்துகிற போரிலை செத்து மடியுதுகள். இரத்த ஓலம் கேட்குது ... இவை கதைச்சுச் சிரிச்சு அன்பு பாராட்டி மகிழுகினம் பாருங்கோ...

இது தான் சர்வதேசம்.... இஸ்ரேல் தன்ரை அழுத்தத்தாலே தாக்குதலை நிறுத்தியிருக்கு எண்டு றைஸ் அம்மையார் சொன்னவா.... ஆனால் பிறகு அந்தப் பாதுகாப்பு அமைச்சர் இல்லை நாங்கள் நிறுத்தேலை... இன்னும் சில கிழமைகளுக்கு ஹிஸ்புல்லாவுக்கு அடிகொடுத்து சர்வதேச படையளை நிறுத்தும் சூழ்நிலையை உருவாக்க வேணும் எண்டு சொல்லிப் போட்டார்.

செய்திக்காரன்களுக்கு அப்ப நாங்கள் அப்படிச் சொல்லுவம் நீங்கள் இப்படிச் சொல்லுங்கோ எண்டு அமெரிக்காவும் இஸ்ரேலும் நல்ல நாடகமாடுகினம் போல இல்லையா? இது தான் பாருங்கோ சர்வதேச இராசதந்திரம்.... போரால சொத்துக்களையும் வீடு வாசல்களையும் கைகால்களையும் உயிர்களையும் உறவுகளையும் தொலைச்சுப்போட்டு கண்ணீரும் இரத்தமும் வடிய வலியோடும் வேதனையோடும் வாழ்நாள் முழுதும் சீரழியும் சனத்தை உலக இராசதந்திரம் கொஞ்சம் மதிக்கவேண்டும் பாருங்கோ.

# அரசு மனிதாபிமானதுடன் செயற்படவில்லை ஜனாதிபதியுடன் ரவூப் ஹக்கீம் வாக்குவாதம்

மூதூரில் மக்கள் இடம்பெயர்ந்திருக்கும் இடங்களில் இராணுவத்தினர் எறிகணை வீச்சுத் தாக்குதல் நடத்தகின்றமை தொடர்பாக ஜனாதிபதி மஹிந்தவுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் அனைத்துக் கட்சி மாநாட்டில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்தில் கடந்த வெள் ளிக்கிழமை இரவு நடந்த மாநாட்டில் ஐக்கிய தேசியகட்சியைத் தவிர நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் கலந்துகொண்டன கட்சிகளின் ஒவ்வொரு பிரதிநிதிகளும் மாநாட்டில் மூதூர் நிலைமை தொடர்பாக கருத்து வெளியிட்டனர். இங்கு கருத்து தெரிவித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினரான ரவூப் ஹக்கீம் அரசாங்கம் மூதூர் மக்கள் விடயத்தில் மனிதாபினமா னத்துடன் செயற்படவில்லை. நிவாரணம் வழங்குவதற்காக விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி தலைமையகம் அனுமதியளித் துள்ளது. ஆனால் இராணுவம் தடுத்துள்ளது. எனக் கூறினார். அதற்குப் பதிலளித்த மஹிந்த இராணுவத்தினர் மக்கள் மீது எறிகணை வீச்சு தாக்குதல் எதனையும் நடத்தவில்லை. நிவார ணம், வழங்குவதற்காக அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

விடுதலைப்புலிகள் அனுமதி வழங்க வேண்டிய அவசியம் இல்லை. சகல பகுதிக ளுக்கும் அரசாங்கமே பொறுப்பு. விடுதலைப் புலிகளின் கட்டுப ாட்டுப்பகுதி என ஒன்று இல்லை என்று குறிப்பிட்டார்.

மீண்டும் கருத்துக் கூறிய நாடாளுமன்ற உறுப்பினரான ரவூப் ஹக்கீம் இராணு வத்தினரே எறிகணை வீச்சுத் தாக்குதுலை நடத்துவதாக மக்கள் தெரிவிக் கின்றனர். நேரடியாகப் பாதிக்கப்படுகின்ற மக்கள் சொல்வதைத் தான் நான் கூறுகின்றேன் என்றார்.

மீண்டும் பதிலளித்த மஹிந்த களத்தில் போராடுகின்ற இராணுவத்தினர் சொல்வ தைத் தான் நானும் உங்களுக்கு சொல்கின்றேன் என்று கூறி இராணுவம் ஒரு போதும் மக்களைத் தாக்காது என எடுத்துக் கூறியுள்ளார். அத்துடன் மூதூர் த்றபோது இராணுவத் தின் கட்டுப் பாட்டில் வந்துகொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். அதனையடுத்து கருத்துத் வெளியிட்ட மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவிக்கையில், வடக்கு கிழக்கு அளு நராக முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் உங் களினால் இவ்வாறு நிர்வாகத்தை அங்கு நடத்த முடியும் என கேள்வி எழுப்பியதுடன் விடு தலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங் களுக்கு பொருளாதார தடை விதிக் கப்பட்டுள்ளதாக வும் சுட்டிக்காட்டினார். அதற்குப் பதிலளித்த் மஹிந்த, இரா ணுவ அதிகாரிகள் மக்களு டன் அன்பாக பழ கக்கூடியவர்கள் ஆகவே நிர்வாகம் செய் வதற்கு பிரச்சினை இருக்காது என்பதுடன் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி என ஒன்றும் இல்லை யெனவும் கூறினார். (அ)

# இஸ்ரேல்- ஹிஸ்புல்லா பரஸ்பரம் எச்சரிக்கை

(பெய்ரூட்)

பெய்ரூட் நகரைத் தொடர்ந்து தாக்கினால் இஸ்ரேல் தலைநகரான டெல் அவிவ் மீது ராக்கெட் குண்டுகளை வீசுவோம் என ஹிஸ்புல்லா தலைவர் இஸ்ரேலுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் கடந்த மாதம் 12ஆம் திகதி இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் இரண்டு பேரை கடத்தியதையடுத்து அங்கு பெரும் சண்டை மூண்டுள்ளது.

இஸ்ரேல் போர் விமானங்களின் தாக்குதல் மற்றும் இராணுவ தாக்குதலில் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதேநேரத்தில் இதற்குப் பதிலடியாக ஹிஸ்பல்லா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் நேற்று வரை 41 இஸ்ரேல் இராணுவத்தினர் உட்பட 68 பேர் கொல்லப்பட்டனர்.

பெய்ரூட்டில் ஹிஸ்புல்லா நிலைகள் மீது இரவு முழுவதும் குண்டு வீசினர். ரபா பகுதியில் புகுந்த இஸ்ரேல் படையினர் வீடு வீடாக தேடுதல் வேட்டை நடத்தினர். பண்ணைகள் மற்றும் விவசாய இடங்களை அழித்து நாசப்படுத்தினர். இந்நிலையில் ஹிஸ்புல்லா தலைவர் சயத் ஹசன் நசரல்லா இஸ்ரேலுக்கு வீடியோ கசட் மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதில்த லெபனானில் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்துவோம். அதற்கான பலம் உள்ளது என்று எச்சரித்துள்ளார். பொதுமக்



கள் மீதான தாக்குதலை இஸ்ரேல் நிறுத்தி விட்டால் ராக்கெட் குண்டு தாக்குதலை நாங்கள் நிறுத்தி விடுகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஹிஸ்புல்லா விடுத்த எச்சரிக்கைக்கு இஸ்ரேல் இராணுவம் உடனடியாக பதில் தந்துள்ளது. இஸ்ரேல் ரீ.விக்கு இது குறித்து மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில்த டெல்-அவிவ் மீது தாக்குதல் நடத்தினால் லெபனானின் உள்கட்டமைப்பு வசதிகளை ஒழித்துக் கட்டிவிடுவோம் என்று பதிலுக்கு மிரட்டல் விடுத்துள்ளார்.

இதற்கிடையே தெற்கு லெபனானில் நகுவாரா நகரின் அருகே மர்காபா கிராமத்தில் புகுந்த இஸ்ரேலிப் படையினர் ஐந்து பேர் ஹிஸ்புல்லா இயக்கத்தினரின் நேரடித் தாக்குதலிலும் கண்ணி வெடியிலும் சிக்கி உயிரிழந்தனர். மேலும் காசா பகுதியில் இஸ்ரேல் வீசிய குண்டுகளால் பாலஸ்தீனியர்கள் மூன்று பேர் நேற்று முன் தினம் பலியாயின். (அ)

# பிடல் காஸ்ரோவுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய அமெரிக்காவில் வசிக்கும் கியூபா நாட்டவர் அழைப்பு

(மியாமி)

நோயுற்று சிகிச்சை பெற்றுவரும் கியூபா நாட்டு அதிபர் பிடல்காஸ்ரோவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யுமாறு கியூபா மக்களுக்கு அந்நாட்டில் இருந்து வெளியேறி அமெரிக்காவில் வசித்துவரும் கியூபா நாட்டவரின் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

குடலில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்காக பிடல் காஸ்ரோ அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார். அதனால் நாட்டின் ஆட்சிப் பொறுப்பைத் தற்காலிகமாக தனது சகோதரர் ரீல் காஸ்ரோவிடம் அவர் ஒப்படைத்துள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி காஸ்ரோவுக்கு எதிராகப் போராட்டத்தை நடத்துமாறு அந்த அமைப்பு கூறியிருக்கிறது.

கியூபாவில் உள்ள சோஷலிஸ ஆட்சி பிடிக்காமல் ஏராளமான கியூபா நாட்டவர் அங்கிருந்து தப்பி அமெரிக்காவில் தஞ்சம் அடைந்துள்ளனர். கியூப அமெரிக்கர் தேசிய ஸ்தாபனம் என்ற அமைப்பை அவர்கள் ஏற்படுத்தியுள்ளனர். அதன் தலைவரான ஜார்ஜ் மாஸ் சான் டோஸ்தான் மேற்கண்ட அழைப்பை விடுத்துள்ளார்.

வேறு அரசியல் பாதையில் கியூபா செல்ல வேண்டும் என்று விரும்புகின்ற அந்நாட்டைச் சேர்ந்த தைரியமுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் இன்று ஓர் அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. அதைப் பயன்படுத்தி பிடல் காஸ்ரோவுக்கு எதிரான கிளர்ச்சியை அவர்கள் தொடங்க வேண்டும். அது மக்களின் கிளர்ச்சியாவும் இருக்கலாம், இராணுவக் கலகமாகவும் இருக்கலாம். அது கியூபாவ்வை ஜனநாயகப் பாதைக்குக் கொண்டு செல்வதாக இருக்க வேண்டும் என்றார் அவர்.

இதற்கிடையில் கியூபாவில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை அமெரிக்க அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. (அ)

# தென் ஆப்கான் பாதுகாப்பை நேட்டோ பொறுப்பேற்பு

(காபூல்)

தெற்கு ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு பொறுப்பை அமெரிக்கா தலைமையிலான படையிடமிருந்து நேட்டோ படை கடந்த திங்கட்கிழமை ஏற்றுக்கொண்டது.

ஆப்கானிஸ்தானில் தலிபான் அரசு சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனுக்கு அளித்த அடைக்கலத்தை தொடர்ந்து நடைபெற்ற சண்டையையடுத்து 5 ஆண்டுகளுக்கு முன்னதாக தெற்கு ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு பொறுப்பை அமெரிக்கா தலைமையிலான படைகள் ஏற்றன.

நேட்டோ படையில் பிரிட்டிஷ், கனடா துருப்புகள் பெருமளவில் இடம்பெற்றுள்ளன. அமெரிக்க படை வீரர்களும் குறைந்த அளவில் இடம்பெற்றுள்ளனர். இப்படையின் தலைவராக பிரிட்டிஷ் லெப்டினன்ட் ஜெனரல் ஜான் டேவிட் ரிச்சர்ட்ஸ் இருப்பார். அமெரிக்கா தலைமையிலான படைகள் இதுவரை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வந்தனர். இப்போது அந்தப் பொறுப்பை நேட்டோ படை ஏற்கிறது. (அ)



சென்னையைச் சேர்ந்த பக்தர் ஒருவர் திருமலை திருப்பதி வெ[illegible]லபதி கோவிலுக்கு ரூ.ஒரு கோடியே ஒரு லட்சம் மதிப்புள்ள வைரத்தி[illegible] செய்யப்பட்ட காதணிகளை வழங்கியுள்ளார்.

# இஸ்ரேலின் குண்டு வீச்சில் லெபனான் விவசாயிகள் 26 பேர் பலியாயினர்



(பெய்ரூட்)

லெபனான் மீது இஸ்ரேல் கடந்த 25 நாட்களாக தொடர்ந்து குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகிறது. பெய்ரூட் உட்பட லெபனானின் முக்கிய நகரங்கள் குண்டு வீச்சில் தீப்பற்றி எரிகின்றன.

இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் லெபனானின் ஹிஸ்புல்லா இயக்கத்தினரும் ஏவுகணை தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இஸ்ரேலின் விமானங்கள் நேற்று முன்தினம் மாலை லெபனான் சிரியா எல்லைப் பகுதியை ஒட்டியுள்ள பிகா பள்ளத்தாக்கு பகுதிகளில் சரமாரியாக குண்டு வீசியது. அங்கு தங்கள் விளைபொருட்களை லொறிகளில் ஏற்றிக்கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீசின. இதில் ஏதும் அறியாத அப்பாவி தொழிலாளர்கள் 26 பேர் பலியானார்கள். 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் காயமடைந்தனர்.

அதன் அருகே உள்ள 2 நகரங்கள் மீதும் குண்டுமழை பொழிந்தது 150 தடவை விமானங்கள் குண்டு வீசின. நேற்று முன் தினம் ஒரே நாள் தாக்குதலில் மட்டும் 40 பொதுமக்கள் பலியானார்கள். கட்டிட இடிபாடுகளில் இன்னும் பலர் உயிரோடு புதைந்துள்ளனர்.

இதுவரை நடந்த தாக்குதலில் லெபனானில் மட்டும் 900 க்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் பலியானார்கள். (அ)



இஸ்ரேல் போர் விமானம் பெய்ரூட்டில் குண்டு வீசியபோது எடுத்த படம்

# வடகொரியா ஏவுகணையை ஏவுதளத்திலிருந்து அப்புறப்படுத்தியுள்ளதாக தென்கொரியா தெரிவிப்பு

(சியோல்)

ஏவுதளத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நீண்டதூர ஏவுகணை ஒன்றை வடகொரியா அப்புறப்படுத்தியுள்ளதாக தென் கொரிய அதிகாரி ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை கூறினார்.

கடந்த ஜுலை 5ஆம் திகதி டேபாடாங் - 2 என்ற நீண்டதூர ஏவுகணையை வட கொரியா விண்ணில் செலுத்தி பரிசோதித்தது. ஆனால் இச்சோதனைக்கு முன்பாக இரண்டு டேபாடாங்-2 ஏவுகணைகளை கிழக்கு கடற்கரையில் உள்ள முசுடான் - ரி எவுதளத்திற்கு கொண்டு சென்றது வட கொரியா.

ஒன்றை மட்டும் பரிசோதித்துப் பார்த்த நிலையில் எஞ்சிய ஒன்றை ஏவுதளத்திலேயே விட்டு வைத்திருந்தது. இந்த ஏவுகணை அடுத்து எப்போதும் ஏவப்படலாம் என்ற கருத்து இருந்து வந்தது.

இந்நிலையில் அந்த ஏவுகணையை ஏவுதளத்தில் இருந்து வடகொரியா அப்புறப்படுத்தியுள்ளதாகவும் ஆனால் அது எங்கு கொண்டு செல்லபட்டது எனத் தெரியவில்லை என்றும் உளவுத் தகவலின் அடிப்படையில் கூறுவதாக தென்கொரிய அதிகாரி தெரிவித்தார்.

அமெரிக்கா மற்றும் தென்கொரியாவின் கண்காணிப்பு காரணமாக ஏவுகணை அப்புறப்படுத்தப்பட்டதாக வடகொரிய நாளேடு ஒன்றில் ஏற்கனவே வெளியான செய்தியையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த ஜுலை 5ஆம் திகதி நீண்டதூர டேபாடாங்-2 ஏவுகணையோடு குறுகிய தூர ஏவுகணைகளையும் வடகொரியா பரிசோதித்தது. இதற்கு பல நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. ஏவுகணை பரிசோதனையை கைவிடுமாறு வடகொரியாவை வலியுறுத்திய ஐ.நா ஏவுகணை தொடர்பான உடன்பாடு எட்ட பிறநாடுகளுக்குத் தடை விதித்தது. (அ)

# தீவிரவாதத்தை ஒடுக்க "சார்க்" நாடுகளின் ஒத்துழைப்பைக் கோரியது இந்தியா

(டாக்கா)

எல்லை தாண்டிய தீவிரவாதத்தை முறியடிக்க பாகிஸ்தான் உள்ளிட்ட சார்க் உறுப்பு நாடுகள் தீவிரமான ஒத்துழைப்பைத் தரவேண்டும் என வெளியுறவு செயலர் ஷியாம் சரண் வலியுறுத்தினார்.

சார்க் உறுப்பு நாடுகளின் வெளியுறவு செயலர்கள் மட்டத்திலான ஆலோசனைக் கூட்டம் வங்கதேச தலைநகர் டாக்காவில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் கலந்து கொண்ட இந்திய வெளியுறவு செயலர் ஷியாம் சரண் பேசும்போது,

ஜுலை 11ஆம் திகதி தீவிவாதிகளால் மும்பை புறநகர் ரயில்களில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவம் தீவிரவாதத்தை அடியோடு அழிக்க வேண்டிய தன் அவசியத்தை அனைத்து நாடுகளுக்கும் உணர்த்தியுள்ளது. எனவே எல்லை தாண்டிய தீவிரவாத்தை அடியோடு வேரறுக்க பாகிஸ்தான் உட்பட சார்க் அமைப்பில் இருக்கும் அனைத்து உறுப்பு நாடுகளும் தீவிர ஒத்துழைப்பு தரவேண் டும். தீவிரவாதம் நாட்டை அச்சுறுத்தும் சக்தியாக உள்ளது.


இதனை கட்டுப்படுத்தி களைய வேண்டிய தேவை நமக்கு இருக்கிறது என்றார். இதற்குப் பதிலளித்த பாகிஸ்தான் வெளியுறவு செயலர் ரியாஸ் முகமதுகான் கூறுகையில்,

தீவிரவாதத்திற்கு எதிராக பாகிஸ்தான் ஏற்கனவே பிரசாரம் நடத்தி வருகிறது என்றார். (அ)

# கர்மவீரர் காமராஜர்

முருக-தனுஷ்கோடி

## மீள்பார்வை 46



## காமராஜ் திட்டம்(K plan)

உள்ளத்தனைய உயர்வு என்ற வள்ளுவன் வாக்கு முழுக்க முழுக்கக் காமராஜுக்கே பொருந்தியது. காமராஜ் வாழ்வில் ஏற்பட்ட உயர்வுக்கெல்லாம் காரணம் அவரது உள்ளமே. உள்ளத்தின் உயர்வு காரணமர்கப் பொது வாழ்வில் உயர்ந்து காணப்படும் வேறு பல தலைவர்களையும் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் அவர்களில் பலர் உயர்வுக்கு நேரடியான காரணம் சற்று வித்தியாசமானதாகவே இருக்கும் உயர்வுக்கு ஆதாரமான காரணம் உள்ளத்தின் உயர்வு என்றாலும் நேரடியான காரணங்கள் உயர்ந்ததாக இருந்ததில்லை.

பிறப்பினால் உயர்ந்த நிலை, செல்வத்தினால் உயர்ந்த நிலை படித்துப் பட்டம் பெற்றதினால் [illegible]ர்ந்த நிலை என்று பல செயற்கைக் காரணங்களும் பலரைப் பெரிய மனிதர்களாக்கியது உண்டு. [illegible]னால் இவற்றில் எதுவுமே இல்லாத நிலையில் தமது உழைப்பின் மூலமே உயர்ந்து விட்டவர் [illegible]லவர் காமராஜ்தான். இந்த உழைப்பின் காரணமாகத்தான் காமராஜின் சிந்தனையில் சோஷ[illegible]ன் மணம் நிரந்தரமாக வீசியது. தட்டியும் கொட்டியும் வெட்டியும் ஒட்டியும் சோஷலிஸ்டான [illegible] [illegible]ட சோஷலிச வார்ப்பான காமராஜை நேருஜி தமது வாரிசாக வரித்துக் கொண்டதற்கும் [illegible]துவே காரணம்.

கா[illegible]ராஜ் ஒரு தலை சிறந்த தேசியத் தரைவராக மட்டும் விளங்கவில்லை. சர்வதேசப் புகழும் மரியாதையும் பெற்ற ஒரு தலைவராகவும் திகழ்ந்தார். இது எவ்வாறு சாத்தியமாயிற்று?

இதன் இரகசியத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அவர் உருவாக்கிய காமராஜ் திட்டத்தைப் புரிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

காமராஜ் திட்டத்தின் பிரதான குறிக்கோள் பதவியில் இருக்கும் ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் காரியக் கமிட்டியின் ஆணைக்குக் கட்டுப்பட்டவர் அவர் எந்தவிதப் பதவியையும் எந்தச் சமயத்திலும் துறப்பதற்கு அல்லது காரியக்கமிட்டி விரும்பும் எந்த வேலையையும் செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துவதேயாகும்.

1963 ஆம் ஆண்டின் மத்தியில் திடீரென இத்திட்டத்தைக் கொண்டுவருவதற்கு என்ன அவசியம் என்று கேட்கலாம்.

காந்திஜியின் உத்வேகமிக்க தலைமையின் கீழ் காங்கிரஸ்காரர்களுக்கு இருந்த லட்சிய நோக்கமும் பொதுஜன சேவா உணர்ச்சியும் காங்கிரஸ் பதவி ஏற்ற பிறகு கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தலைப்பட்டு விட்டது என்றும், மந்திரியாக வேண்டும், அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற பதவிப் பித்து அதிகரித்து விட்டது என்றும் காமராஜ் எண்ணினார்.

காங்கிரஸ் தனது பழைய சேவா உணர்ச்சியை மீண்டும் பெற வேண்டும் என்றால் உயர்ந்த பதவியில் இருக்கும் காங்கிரஸ்காரர்கள் அவற்றைத் துறக்க வேண்டும் என்று கருதினார். காமராஜ் தேசிய சேவை செய்வதற்குப் பதவியில் இருந்து அதிகாரம் செலுத்துவதைத் தவிர வேறு மார்க்கங்களும் இருக்கின்றன. என்பதை நடைமுறையில் செய்து காட்ட வேண்டும் எனவும் காமராஜ் கருதினார்.

எப்படியிருந்த போதிலும் ஒரு சிலர்தான் மந்திரிகளாக இருக்க முடியும். மற்றவர்கள் அதைப் பார்த்து விரக்தி. அசூயை அடையக் கூடாது. அவர்கள் பதவி வகிக்காமலேயே வேறு ஏதேனும் ஒரு வழியில் தேசிய நிர்மாணப் பணிகளில் இறங்க வேண்டும் எனவும் விரும்பினார் காமராஜ்.

தமது அந்தரங்க சுத்திக்கு அடையாளமாகத் தாம் வகித்துவந்த முதல் மந்திரி பதவியையே ராஜினாமா செய்துவிடுவது என்று காமராஜ் தீர்மானித்தார்.

### நேருஜியிடம் விளக்கம்

1963ஆம் ஆண்டு ஜுலை மாதம் காமராஜ் நேருஜியை ஹைதராபாத்தில் சந்தித்தார். தமது முடிவை அப்போது நேருஜியிடம் தெரிவித்தார். காமராஜின் கருத்தை சோஷலிச மணம் பரப்பும் தனது வாரிசின் கருத்தை நேருஜி வரவேற்றார். அதுமட்டுமல்ல காமராஜ் விரும்பியதை இன்னும் பரந்த அடிப்படையில் அமுல் செய்து காங்கிரஸ் ஸ்தாபனத்தில் நல்ல வரவேற்கத்தக்க மாறுதலை உண்டாக்கவேண்டுமெனவும் நேருஜி எண்ணினார்.

1963ஆம் ஆண்டு மத்தியில் உத்தரப் பிரதேசத்திலும் ராஜ்கோட்டிலும் ஏற்பட்ட தோல்வி நாடெங்கும் காங்கிரஸ் கட்சியில் எதிரொலிக்கத் தொடங்கியது. மந்திரி சபை கட்சி ஆகியவற்றிடையே எழுந்த தகராறு கோஷ்டி மனப்பான்மை ஆகியவைகளால் மந்திரி சபைகளின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்பட்டது. இதையெல்லாம்விட பதவி மோகமும் சந்தர்ப்பவாதமும் வளர்ந்தன. காமராஜ் திட்டம் கொண்டு வரப்படுவதற்கு இதுவே காரணம்.

காங்கிரஸ் கட்சிக்குள் கட்டுப்பாட்டின்மையும் பதவிப் பித்தும் வளர்ந்து வருவதைக் கண்டு நேருஜி கவலைப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் புனிதன் காமராஜ் தமது திட்டத்தை நேருஜியிடம் விளக்கினார்.

காரியக் கமிட்டியின் அதிகாரத்தை நிலைநாட்டப் புதுமையான நடவடிக்கையைத் திடீரென்று மேற்கொண்டாலன்றிக் காங்கிரசின் ஐக்கியமும் கட்டுப்பாடும் பெரிதும் சீர்குலைந்துவிடும் என நேருஜி கருதிய நேரத்தில் உத்தமன் காமராஜ் தமது திட்டத்தை நேருஜியிடம் தெரிவித்தார்.

பிறகு சென்னை திரும்பிய காமராஜ் நேருஜியின் அழைப்பின் பேரில் டெல்லி சென்றார். அவருடைய பாதை அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது. எந்தக் கூக்குரலும் அவரது காதைத் துளைக்கவில்லை.

டெல்லி நகரமும் பாராளுமன்ற வட்டாரங்களும் மிகுந்த பரபரப்புடன் காணப்பட்டன. 1963 ஆம் ஆண்டுஆகஸ்டு 9ஆம் திகதி அகில இந்திய காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம் நடந்தது. காமராஜ் திட்டம் பதவி துறப்புத் தீர்மானம் காமராஜால் இக் கூட்டத்தில் முன் மொழியப்பட்டது. அரசாங்கப் பதவிகளில் உள்ள அனுபவமிக்க முதிர்ந்த தலைவர்கள் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்துவிட்டு காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்த வேலை செய்யவர வேண்டும் என்று அந்தத் தீர்மானம் கூறியது. தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

மாநில முதல் மந்திரிகள், மந்திரிகள் தங்கள் இராஜினாம கடிதங்களை பிரதமர் நேருஜியிடம் கொடுத்துவிடுவதென்றும், அதில் யார் யாருடைய இராஜினாமாவை அவர் ஏற்கிறாரோ அவர்கள் [illegible]ல்லாம் கட்சி வேலைக்கு திரும்பிவிடலாம் என்றும் காரியக்கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டது. [illegible]தன் படியெல்லாம் நடந்தது.

(தொடரும்)




கந்தரோடை வீரகத்தி விநாயகர் ஆலய
அலங்கார உற்சவம்
எட்டாம் திருவிழா 06.08.2006

கந்தரோடை குடி அமர்வான்

அடியவர் துயர்கெட வடிவுள வுருவொடு
படிமிசைப் பலர்தொழு பயன்பெறும் பண்பினால்
விடிவெளியால் வீரகத்தி விநாயக நாமமொடுங்
கடிகமழ்கா பொலிகந்த ரோடை குடியமர்வானே

சிவ. சண்முகவடிவேல்


## லெபனானிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களை அழைத்துவர இலங்கை அரசு நடவடிக்கை

(கொழும்பு)

லெபனானிலிருந்து இது வரை ஆயிரத்து 250 இலங்கைத் தொழிலாளர்கள் திருப்பி அழைத்து வரப்பட்டுள்ளதாக இலங்கைவெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

மேலும் 2 ஆயிரம் பேர் இலங்கை வருவதற்கு லெபனானிலுள்ள இலங்கைத்தூதரகத்தில் பதிவு செய்துள்ளனர்.

அகதிகளுக்கான சர்வதேச அமைப்பின் உதவியுடன் இவர்களை வெகுவிரைவில் இங்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்தப் பணியகத்தின் பொது முகாமையாளர் எஸ். வட்டகொட தெரிவித்துள்ளார்.

கிரியாவிலிருந்து இலங்கையர்களை அழைத்து வருவதற்கு கட்டார் விமான சேவை முன்வந்துள்ளது. எனினும் சிரியாவில் தற்போது காணப்படும் சனநெருக்கம் காரணமாக ஒரு நாளைக்கு 500 பேர் மாத்திரம் அழைத்துவர முடியுமென்று வெளிநாட்டு அமைச்சின் ஊடாக ஒருங்கிணைப்பாளர் ஹெமாலி அருண திலக்க தெரிவித்துள்ளார்.


இலங்கை தொழிலாளர் களை அழைத்து வருவதற்கு கூடுதலாக விமானங்களை சேவையில் ஈடுபடுத்துவது குறித்து சிறிலங்கன் விமான சேவையுடன் தற்போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றது. (து-9)

## பருத்தித்துறை புனித நகரில் 15 வீடுகள் நிர்மாணம்

(பருத்தித்துறை)

சுனாமியால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மக்களுக்கு மகளிர் அபிவிருத்தி நிறுவனம் பருத்தித்துறை புனித நக்ரில் 15 நிரந்தர வீடுகளை நிர்மாணித்து வழங்கவுள்ளது.

மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 5 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவ் ஐந்து வீடுகளின் நிர்மாணப்பணி பூர்த்தியானதும் அடுத்த கட்ட 10 வீடுகளின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப் படுமென மகளிர் அபிவிருத்தி நிறுவனம் தெரி வித்துள்ளது. (து-52)









நிக்கொட்டினால்60 இலட்சம் ரூபா செலவில் நேற்று முன்தினம் யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட விஞ்ஞான கூடத்தையும், இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரதம விருந்தினர் நிக்கொட் நிறுவன பிரதி திட்டமிடல் பணிப்பாளர் க.நவரத்தினராஜா,உரை நிகழ்த்துவதையும், கல்லூரி அதிபர் மற்றும் சிறப்பு விருந்தினர்களையும் மற்றும் மாணவர்கள், பெற்றோர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :திலீவின்பன்)

# முக்கிய பொது அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக 36 கிராம சேவையாளர் பிரிவு சம்பந்தமான உயர் பாதுகாப்பு வலய அடிப்படை மனித உரிமை சம்பந்தமான வழங்குகளில் (வழ.இல.533/2004,646/2003) உச்ச நீதிமன்ற தீர்ப்பு

மேற்படி தீர்ப்பின் பிரகாரம் தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள பின்வரும் 36 கிராம அலுவலர் பிரிவினுள் நிரந்தரமாக வசித்த குடும்பங்களினுள் தற்போது மீளக் குடியமர விரும்பும் குடும்பங்களை இணங்காணுவதற்காக எதிர்வரும் 10.08.2006 ஆம் திகதி தொடக்கம் அவர்கள் தற்போது தற்காலிகமாக வதியும் பிரதேச செயலர் பிரிவில் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களால் அவர்களின் தகுதியினை தீர்மானிப் பதற்கான நேர்முக விசாரணை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இடம்பெயர்ந்து வாழுகின்ற கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிராம அலுவலர்கள் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களின் தலைவர் அல்லது அவரால் எழுத்துமூலமாக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதியை, பின்வரும் ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட பிரதேச செயலரால் அறிவிக் கப்படும் திகதிகளில் சமுகமளித்து இவ் விசாரணையை துரிதமாக நிறைவேற்றுவதற்கு உதவும் வண்ணம் வேண்டுகின்றேன்.

| தொ. இல | கி.பி.இல | கி.பி.பெயர் | தொ. இல | கி.பி.இல | கி.பி.பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | J/221 | இளவாலை வடக்கு | 19 | J/239 | கட்டுவன் மேற்கு |
| 2 | J/222 | இளவாலை வடமேற்கு | 20 | J/240 | தென்மயிலை |
| 3 | J/223 | வித்தகபுரம் | 21 | J/241 | வறுத்தலை விளான் |
| 4 | J/224 | பன்னாலை | 22 | J/242 | குரும்பசிட்டி |
| 5 | J/225 | கொல்லங்கலட்டி | 23 | J/243 | குரும்பசிட்டி கிழக்கு |
| 6 | J/226 | நகுலேஸ்வரம் | 24 | J/244 | வசாவிளான் கிழக்கு |
| 7 | J/227 | தெல்லிப்பழை கிழக்கு | 25 | J/245 | வசாவிளான் மேற்கு |
| 8 | J/228 | தெல்லிப்பழை | 26 | J/246 | மயிலிட்டி வடக்கு . |
| 9 | J/229 | துர்க்காபுரம் | 27 | J/247 | தையிட்டி கிழக்கு |
| 10 | J/230 | தந்தை செல்வாபுரம் | 28 | J/248 | மயிலிட்டி துறை தெற்கு |
| 11 | J/231 | மாவிட்டபுரம் | 29 | J/249 | தையிட்டி வடக்கு |
| 12 | J/232 | மாவிட்டபுரம் தெற்கு | 30 | J/250 | தையிட்டி தெற்கு |
| 13 | J/233 | காங்கேசன்துறை மேற்கு | 31 | J/251 | மயிலிட்டிதுறை வடக்கு |
| 14 | J/234 | காங்கேசன்துறை மத்தி | 32 | J/252 | பலாலி தெற்கு |
| 15 | J/235 | காங்கேசன்துறை தெற்கு | 33 | J/253 | பலாலி கிழக்கு |
| 16 | J/236 | பளை விமன்காமம் வடக்கு | 34 | J/254 | பலாலி வடக்கு |
| 17 | J/237 | பளை விமன்காமம் தெற்கு | 35 | J/255 | பலாலி வடமேற்கு |
| 18 | J/238 | கட்டுவன் | 36 | J/256 | பலாலி மேற்கு |

## ஆவணங்கள்

01. ஆட்பதிவு அடையாள அட்டை
02. காணி உரிமையை நிரூபிக்கும் ஆவணம்
03. குடும்பப் பங்கீட்டு அட்டை/ மின்கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு /சோலை வரி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு அல்லது வேறுபிற (இருப்பின்)
04. வாக்காளர் அட்டை (இருப்பின்)
05. வாக்காளர் இடாப்பின் பிரிப்பிதழ் (இருப்பின்)
06. காணி உரிமையையும் வசிப்பிடத்தையும் உறுதிப்படுத்தக்கூடிய வேறு ஆவணங்கள், மேலே சொல்லப்பட்ட ஆவணங்கள் இல்லாவிடத்து உரிமையை உறுதிப்படுத்தும் சத்தியக் கடதாசி.

மேற்படி விசாரணை குறிப்பிட்ட வழக்குகளில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிர காரம் உச்ச நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட பின்வரும் நான்கு நிபந்தனையின் அடிப்படையில் மீளக்குடியமர விரும்பும் குடும்பங்களை இனங்காணுவதற்காக நடாத்தப்படுகின்றது. மீளக்குடியமர விரும்பும் குடும்பங்களின் வசதி கருதி ஏற்கனவே பத்திரிகைகளில் பிரசுரிக் கப்பட்ட நான்கு நிபந்தனைகளும் கீழே தரப்படுகின்றன.

01. மீள் குடியேற விரும்புபவர்கள் மாவட்ட செயலாளர், பாதுகாப்புப் படைகளில் பிரதிநிதிகளுடனான நேர்முகம் ஒன்றுக்கு சமுகமளித்து தங்களுடைய அடையாளம், தங்களுடைய காணிக்குரிய உரித்து ஆவணம் மற்றும் ஏனைய தொடர்புடைய விபரங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
02. அவர்கள் ஒன்று சேர்ந்து பிரசைகள் குழு ஒன்றை அமைத்து அதன்மூலம் எவ்வித ஆயுத அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளினால் பாதுகாப்பு தரப்பினருக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படாது என்ற உத்தரவாதத்தினை வழங்கவேண்டும்.
03. மீள்குடியேறும் நபர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் எழுதப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக விவசாய நடவடிக்கைகளில் அல்லது வேறு நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.
04. அரசாங்கத்தினால் வழங்கப்படும் இலவச உலர் உணர்வுகளை கோர இயலாது.

*க.கணேஷ்*
*அரசாங்க அதிபர்,*
*யாழ்.மாவட்டம்.*

# மக்களுக்காக நடாத்தப்படுவதாகக் கூறப்படும் போரில் மக்களே பலிக்கடாவாக்கப்பட்டுள்ளனர் -திருமலை ஆயர்

(மூதூர்)

மூதூர்பிரதேசத்தில் பாதிக்கப்பட் டுள்ள சிறுவர்கள் , குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கான குழந் தைகளை மீட்கும் பொருட்டு மோத லில் ஈடுபட்டுள்ள இரு தரப்பின ரும் யுத்தத்தை நிறுத்த வேண்டு மென்று திருகோணமலை ஆயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தி யாவசிய தேவைகளை வழங்குவ தற்கு குறிப்பிட்ட ஒரு கால அவகா சத்தையேனும் சம்பந்தப்பட்ட இரு தரப்பி னரும் வழங்கவேண்டு மென்று ஆயர் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு நீர் வழங்குவதற் காக நடத்தப்படுவதாகக் கூறப்படும் இந்த யுத்தத்தில் மக்களே பலிக் கடாவாக்கப்பட்டுள்ளமை கவலைக் குரிய விடயமாகும்.

எனவே அப்பாவி மக்கள் பாதிக் கப்படாதவாறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதை இருதரப் பினரும் உறுதிப்படுத்த வேண்டு மென்று ஆயர் விடுத்துள்ள அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் தங்குமிடங்கள், அகதி முகாம்கள், மருத்துவமனைகள், ஆலயங்கள் தாக்கப்படுவதும் உடன் நிறுத்தப்படவேண்டுமென் றும் ஆயர் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

ஏற்கனவே இடம்பெற்ற வன் முறைகளாலும் குண்டு வெடிப்புக் களாலும் நிலைகுலைந்து இடம் பெயர்ந்து இன்னல்களுக்கு உள்ளா கியும் வாழ்ந்து வரும் மக்கள் மீது யுத்தம் என்ற கொடிய சுமை சுமத் தப்பட்டுள்ளதாக சுட்டிய ஆயர், போர்நிறுத்த உடன்படிக்கையை மதிப்பவர்களுக்கு யுத்தம் ஒருபோ தும் தெரிவாக அமைய முடியாது. எனவே யுத்தத்தை உடனடியாக நிறுத்தி சமாதானத்திற்கான பேச்சு வார்த்தைகளை உடனடியாக ஆரம் பிக்குமாறு பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரையும் கோருவதாக திரு கோணமலை ஆயர் தனது அறிக் கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-



ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் அண்மை யில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த க.தேவராஜா மற்றும் அவரது துணைவியாரையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்த செ.குபேரநாதனையும், அதிபர் செ. சிவநடராசா, உப அதிபர் செல்வி சி. உதயகலா ஆகியோர் அழைத்து வருவதனை படத்தில் காணலாம்.

# அச்சுறுத்தலுக்கு எதிராக வீதியில் இறங்குவோம் தமிழ் மாணவர் ஒன்றியம் அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

ஹாட்லிக் கல்லூரியை மூடி விடும்படி படையினர் மிரட்டியுள்ள தாகவும், அதனால் மாணவர்கள் வீதியில் இறங்கி போராட முயற்சிக் கின்றனர் என்றும், ஆகவே பாடசா லை சூழலை விட்டு இராணுவம் விலகி கல்லூரியை சுதந்திரமாக இயங்க வழிவகுக்குமாறும் அரசுக் கும் சர்வதேச நாடுகளுக்கும் தமிழ் மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கோரிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, யாழ். பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரியை தமது அச்சுறுத்தலின் மூலம் மூடிவிடுதவ தற்கு படைத்தரப்பால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சென்றவாரம் ஹாட்லிக் கல்லூரி சிரேஷ்ட மாணவ தலைவன் படையி னரால் கடத்தப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அத்தோடு கல்லூரிக்கு நேற்று முன்தினம் சென்ற படையினர் பாடசாலையை மூடிவிடும்படி மிரட்டியுள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி கல்லூரிக் குச்சென்ற படைத்தரப்பினர் அதி பரை பாடசாலையை மூடிவிடும்படி அச்சுறுத்தியதோடு அதிபர், ஆசிரி யர்,மாணவர்களுக்கு உயிர் அச்சு றுத்தல் விடுத்ததையும் அறியமுடி கின்றது.

நான்காம் திகதி மாணவர்கள் சென்று வருகின்ற பாதையானது படையினரால் முட்கம்பிகள் போடப் பட்டு மறிக்கப்பட்டுள்ளது.

ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மற்றும் ஏனைய பல பாடசாலை கள் படையினரால் பாரிய அச்சுறுத்தல்களை விடுத்திருக்கும் வேளையில் மிகவும் அராஜக செயற் பாடாகவே இதனைப் பார்க்கின் றோம்.

காலம் காலமாக தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்டிருக்கும் கல்வி ரீதியான ஒடுக்குமுறைகள் தலை விரித்தாடும் குடாநாட்டில் பாடசா லைகள் எல்லாம் துப்பாக்கி முனை கள் எட்டிப்பார்கின்ற சிறைக்கூறு களாக இருக்கின்ற இவ்வேளை யில் மாணவர்கள் தமது உரிமைக் காக சுதந்திரமாக கற்பதற்காக, சுதந்திரமாக நடமாடுவதற்காக ஏங்கித் தவிக்கின்றார்கள். தமது எதிர்காலம் பற்றி எண்ணி வருத்த மடைகின்றனர். இந்நிலையில் மேற்படி சம்பவம் மாணவர்களை மேலும் ஆத்திரமூட்டுவதாய் அமை ந்துள்ளது. மேற்படி சம்பவத்தால் மாணவர்கள் வீதியில் இறங்கி போ ராட முயற்சிக்கின்றனர். இதனை படைத்தரப்பு சரியாக விளங்கிக் கொண்டு ஹாட்லிக் கல்லூரி சுதந்தி ரமாக இயங்குவதற்கு வழி விட வேண்டும். ஏனைய பாடசாலை களை அச்சுறுத்தியுள்ள இராணு வம், பாடசாலை சூழலை விட்டு வேறு இடங்களுக்கு நகருதல் வேண்டும். இந்த அவசர வேண்டுகோளை ஸ்ரீலங்கா அரசுக்கும் சர்வதேச நாடு களுக்கும் விடுக்கின்றோம். எமது இந்தக் கோரிக்கைகளை அரசு மிக மிக விரைவாக பரிசீலனை யில் எடுக்கத் தவறுமானால் அர சை எதிர்த்து போராட்டங்களை எதிர்வரும் நாட்களில் மேற்கொள் வோம். (அ)

நல்லதைச் செய்ய வேண்டும். நல்லதைச் சொல்ல வேண்டும். நல்லதை நினைக்க வேண்டும் என்ற இலட்சியத்தில் ஈடுபட்டால் யாவும் நல்லனவாகவே இருக்கும்.

-சுவாமி இராமதாசர்

வலம்புரி

# சமாதானத்தின் தேவைப்பாட்டை பேரினவாதிகள் உணர்வார்களா?

மூதூரில் இடம்பெற்ற யுத்தம் சமாதானத்தை வலியுறுத்துவதாகவேயுள்ளது. நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் இருதரப்புப் படைப் பலமும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் தலைவர் பிரபாகரன் கைச்சாத்திட்டதன் பின்னர், விடுதலைப் புலிகள் பலம் இழந்து விட்டார்கள் என்ற பிரசாரம் தென்னிலங்கையில் பேரினவாதிகளால் மேற்கொள்ளப்பட்டது.

விடுதலைப்புலிகள் சமாதானத்தை விரும்புவது அவர்களின் பலயீனத்தால் என்ற அரசின் நினைப்பிற்கு உரிய பதில் மூதூரில் வழங்கப்பட்டுள்ளது என்றே கூறவேண்டும்.

2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கைக்குப் பின் ஆங்காங்கே யுத்தநிறுத்த மீறல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போதிலும், மூதூரில் தற்போது நடந்த யுத்தமே மிகப் பெரிய தாக்குதலாகும்.

மூதூரின் பெரும் பகுதியை கைப்பற்றி தமது பலத்தை விடுதலைப்புலிகள் நிரூபித்துள்ளனர். இச் சம்பவமானது சமாதானத்தின் தேவைப் பாட்டை வலியுறுத்துகிறது.

விடுதலைப்புலிகள் பலமிழந்து விட்டனர். அந்த அமைப்பில் சுமார் ஏழாயிரம் பேரே உள்ளனர் என்று இராணுவத் தளபதிகளின் அறிவிப்பானது அவர்களின் பொறுப்பற்ற தன்மையையே காட்டி நிற்கிறது.

இத்தகைய அறிவிப்புக்கள் சமாதானத்தை விரும்பும் மக்களையும் திசைதிருப்பிவிடக் கூடியது. ஏழாயிரம் விடுதலைப்புலி உறுப்பினர்களே உள்ளனர் என்றால் அவர்களை வெல்ல முடியாமல் இருப்பது ஏன்?

தமது பதவிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உண்மைக்குப் புறம்பான தகவல்களைத் தெரிவிப்பது நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்கே வழிவகுக்கும்.

மூதூரில் நடந்த யுத்தத்தில் வெற்றி எங்குள்ளது என்பதைப் படைத் தரப்பினர் நன்குணர்ந்திருப்பார்கள்.

போர் மூண்டதால் மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டமையும் வீடுகள் மற்றும் உடைமைகள் சேதமடைந்தும் போறிற்று. இன்று மூதூர், நாளை எங்கே என்ற கேள்வியை சமாதானத்திற்கு எதிராகக் கோஷம் போடும் பேரினவாதிகள் தமக்குள் எழுப்ப வேண்டும்.

எதற்கெடுத்தாலும் இனவாதம் பேசி சமாதானத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் கொடுமையை ஜே.வி.பி. போன்ற இனவாதிகள் கைவிட வேண்டும்.

கூடவே சிங்கள ஆட்சியாளர்களின் இனவாதப் போக்கிற்கு உதவி வந்த முஸ்லிம் கட்சிகளும் தமது குறுகிய மனப்பாங்கைக் கைவிட்டு, இனப் பிரச்சினையை முடிபுக்குக் கொண்டு வருவதற்கும் எல்லா மக்களும் நிம்மதியாக வாழ்வதற்கும் உதவ வேண்டும்.

இதனைச் செய்வதற்கு முஸ்லிம் கட்சிகள் பின்னடிக்குமேயரயின் அரச படைகளின் ஆட்லறிகளினாலேயே முஸ்லிம் மக்கள் பலியாகினர் எனக் கூறும் பரிதாபம் தொடரவே செய்யும்.

# செய்மதியூடாக ஒளிபரப்புகளை மேற்கொள்ள சீ.பி.என்.சற் நிறுவனத்துக்கு நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

செய்மதியூடான நிகழ்ச்சிகளை பரீட்சார்த்தமாக ஒளிபரப்பு செய்வதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. சீ.பி.என் .சற் நிறுவனம் செய்மதியூடாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு சட்ட ரீதியாக தடை விதிக்கப்பட்டதற்கு எதிராக சொனிக் நெற் டெக்னோலோஜிஸ் பிரை லிமிட்டட் நிறுவனம் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுமீதான விசாரணை நேற்று முன்தினம் இடம் பெற்றது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையில் நீதியரசர்களான உடலகம சோமவன்ச ஆகியோரை கொண்ட குழுவினர் முன்னிலையில் மனு விசாரணைக்கு வந்தது.

சட்டத்தரணிகளின் வாதப் பிரதிவாதங்களை அவதானித்த மூவர் கொண்ட நீதியரசர் குழுவினரே பரீட்சார்த்த ஒளிபரப்புக்கான அனுமதியை வழங்கியுள்ளனர்.

அத்துடன் சீ.பி.என்.சற் நிறுவனத்தின் ஒளிரப்பு உபகரணங்களை திருத்தியமைப்பதற்கும் நீதியரசர் குழு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தத் தடை தொடர்பான அனைத்து தேவைகளும் நிறைவுற்றிருந்தால் சீ.பி.என்.சற் நிறுவனத்திற்கான மீள் ஒளிபரப்பு அனுமதியை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அது தொடர்பான கூட்டமொன்றை இரு வாரங்களுக்குள் ஏற்பாடு செய்யுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இருந்தபோதும் இப் பரீட்சார்த்த ஒளிபரப்புக்களை கண்காணிப்பதற்கான அனுமதியை ஊடகத்துறை அமைச்சிற்கு நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறும் இவ் வழக்கின் அடுத்த விசாரணையின் போது சீ.பி.என் .சற் நிறுவனத்திற்கு அனுமதி பத்திரம் வழங்குதல் தொடர்பான பூர்வாங்க அறிக்கை ஒன்றை மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதியரசர்கள் குழுவினர் ஊடகத்துறை அமைச்சின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை பணித்துள்ளனர். (அ)

# பேச்சுக்களை நிறுத்தி இமாலய சக்தியை வெளிக்காட்டி நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி அழைப்பு

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ காரியாலயத்தில் இடம்பெற்ற வைபவத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேச்சுக்களை நிறுத்தி செயலில் இறங்கும் காலம் வந்துவிட்டது என்று கூறினார்.

இவ்வளவு நாளும் நாம் நிறைய பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்தோம். இப்போது நாம் செயலில் இறங்கி எமது இமாலய சக்திகளை வெளிக்காட்டுவதற்கும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் காலம் வந்துள்ளது என்றார் மஹிந்த.

நாட்டில் மறுமலர்ச்சிக்கும் எழுச்சிக்கும் நாட்டு மக்கள் நேரடியாக பங்களிப்பது அவர்களது கடமை என்றும் அவர் குறிப்பிட்டார். புதிதாக தங்கள் விசேட பட்டப் படிப்பை முடித்துக்கொண்டு கல்வி நிலைய நிர்வாகப் பணியாளர் பயிற்சிக்கான நிறைவுப் பட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் பொதுசேவை ஊழியர்களுக்கு ஜனா திபதி மஹிந்த சான்றிதழ்களை வழங்கினார். (அ)

# தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இலங்கைப் பொலிஸார் வெளியேற்றப்பட்டனர்

(கொழும்பு)

கோவையில் பயிற்சிபெற வந்த இலங்கைப் பொலிஸார் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு விட்டதாக தமிழ்நாடு முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

கோவையில் உள்ள மத்திய ரிசர்வ் காவல்துறை பயிற்சி நிலையத்தில் இலங்கையைச் சேர்ந்த 45 பொலிஸாருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. பெரும் சர்ச்சையை எழுப்பியுள்ளது தமிழகத்தில் உள்ள முக்கிய கட்சிகள் அனைத்தும் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து தமிழக சட்டசபையில் பா.ம.க. விடுதலைச் சிறுத்தைகள் ம.தி.மு.க இந்திய கம்யூனிஸ்ட ஆகிய கட்சிகள் பிரச்சினை எழுப்பின.

விடுதலைச் சிறுத்தைகள் உறுப்பினர் செல்வம் பேசுகையில்,

நூற்றுக்கணக்கான தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்று குவித்துவரும் நிலையில் அந்த நாட்டவருக்கு இங்கு போர் சார்ந்த பயிற்சியை அளிப்பது தமிழ் மக்களுக்கு எதிரானது .இதனால் தமிழர் நெஞ்சம் கொதிப்படைந்துள்ளது.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு இதுகுறித்து பேசிய முதல்வர் இந்த பிரச்சினை சட்டசபையில் எழுப்பப்பட்டுவிட்டதால் மத்திய அரசு கவனத்தில் கொள்ளும் என நம்புவதாக தெரிவித்தார். ஆனால் முதல்வரின் வார்த்தைக்கு மதிப்பளிக்காமலும் தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமலும் அங்கு தொடர்ந்து அளிக்கப்படுகிறது என்றார்.

இதேபோல் பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சிவபுண்ணியம் ஆகியோரும் பேசினர். அவர்களுக்குப் பதிலளித்து முதல்வர் கருணாநிதி பேசுகையில்,

இந்தப் பிரச்சினை அலட்சியப்படுத்தக்கூடியதல்ல என்பதை நானும் அறிவேன். இது தொடர்பாக விரிவாக விளக்கம் அளித்துள்ளேன். அங்கே பயிற்சி பெறுவது இராணுவம் அல்ல பொலிஸார் என்றும் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான சிறப்பு பயிற்சிதான் அது என்றும் விளக்கம் அளிக்கப்படுகிறது.

இந்த சந்தேகத்தை போக்க வேண்டிய தமிழ் மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டிய பெரும் பொறுப்பு தமிழக அரசுக்கு மாத்திரமல்ல மத்திய அரசுக்கும் உண்டு.

தமிழர்கள் எங்கே தாக்கப்பட்டாலும் தமிழர்கள் வேதனைப்படுவதும் கலங்கி நிற்பதும் இயல்புதான். இந்தப் பயிற்சி குறித்து நாம் அனைவருமே வருத்தப்படுகிறோம் வேதனைப் படுகிறோம்.

வெறும் பொலிஸ் பயிற்சிதான் என்றாலும் கூட இப்போது இது தேவையா என்பதை இலங்கை அரசும் இந்திய அரசும் எண்ணிப்பார்க்கவேண்டும். 1980 ஆண்டு கால கட்டப் பகுதியில் நான் முதல்வ்ராக இருந்தபோது அப்போதைய பிரதமர் ராஜீவ்காந்தியை மரியாதை நிமித்தமாக சந்தித்தேன்.

அப்போது நாங்கள் இருவரும் நடத்திய உரையாடலின் முடிவு வெற்றிகரமாக இருந்திருந்தால் இலங்கைப் பிரச்சினையே நல்ல விதமாக முடிந்திருக்கும். கோவையில் பயிற்சி பெற வந்த இலங்கைப் பொலிஸார் குறித்த தகவலை கடந்த 2 ஆம் திகதி தமிழக அரசின் தலைமைச் செயலாளர் மத்திய உள்துறை செயலாளருக்கு எடுத்துரைத்தார்.

கடந்த 3ஆம் திகதி இது தொடர்பாக மத்திய உள்துறைச் செய லாளருக்கு கடிதம் ஒன்றும் அனுப்பப்பட்டது. இதையடுத்து கோவையில் பயிற்சிபெற்று வந்த அனைவரும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டனர் என்று கூறினார் கருணாநிதி. இதை உறுப்பினர்கள் அனைவரும் மேசைகளைத் தட்டி வரவேற்றனர். இருப்பினும் சிங்கள பொலிஸாரும் தமிழக மண்ணில் பயிற்சி பெற அனுமதி கொடுத்த மத்திய அரசைக் கண்டித்து வெளிநடப்பு செய்வதாகக் கூறி விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்ட சபை உறுப்பினர்கள் வெளியேறினர். அவர்களைத் தொடர்ந்து ம.தி.மு.கவும் வெளிநடப்பு செய்தது. அப்போது அ.தி.மு.க கொறடா செங்கோட்டையன் எழுந்து மத்திய அரசு பயிற்சி அளிக்க அனுமதி தந்தது என்றால் இது குறித்து மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.கவுக்கு தெரியுமா தெரியாத மாநில முதல்வருக்கு இது பற்றிக் கூட தெரியாதா என்று கூறி அதனைக் கண்டித்து வெளிநடப்புச் செய்வதாக அறிவித்தார் பின்னர் அ.தி.மு.கவினரும் வெளிநடப்பு செய்தனர். (அ)

# புலிகளைத் திசை திருப்ப வடக்கே தாக்குதல் நடத்த முன் ஏற்பாடு

(கொழும்பு)

மூதூரில் நடைபெற்றுவரும் தாக்குதலில் இருந்து விடுதலைப் புலிகளை திசைதிருப்பும் நோக்குடன் யாழ்.கிளாலி, நாகர் கோவில் படைத்தளங்களில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி பாரிய படை எடுப்புக்களை மேற்கொள்ளும் நோக்குடன் சிறிலங்கா படையினர் யுத்த ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா படையினரின் முன்னரங்க நிலைகளை நோக்கி பாரிய யுத்த தளபாடங்கள் நகர்த்தப்படுவதுடன் பெருமளவு படையினரும் முன்னரங்க நிலைகளை நோக்கி நகர்த்தப் படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

# அவசர கூட்டம்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான அவசர கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியால்யத்தில் நடைபெறவுள்ளதெனவும் தொண்டர்களைத் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும்படியும் கூட்ட அமைப்பாளர் கேட்டுள்ளார். (அ-29)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



விதி வழி மதி .செல்லும் என்று பொதுவாகச் சொல்வது வழக்கம். இறைவன் அருளால் விதியையும் வெல்ல முடியும். மதியையும் வெல்ல முடியும்.

சுவாமி விவேகானந்தர்

# சைவசமய விவகாரக் குழுவால் யாழ் விருது வழங்கப்படும்

## இவ்வாண்டு டாக்டர் தெய்வேந்திரனுக்கு விருது

யாழ்.மாநகரசபைபயின் சைவ சமய விவகாரக் குழுவினால் சமய சமூகப் பணி செய்பவர்களுக்கு யாழ் விருது வழங்கி கௌரவிக்கவுள்ளது.

யாழ்.மாநகரசபையின் சைவ விவகாரக் குழுவினால் வழங்கப்படும் அதியுயர் விருதாக யாழ் விருது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபையின் ஆணையாளரும் சைவ சமய விவகாரக்குழுத் தலைவருமான சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

நல்லூர்க் கந்தன் ஆலய மஹோற்சவ காலத்தில் நல்லைக் குமரன் மலரை வெளியிட்டு வரும் யாழ்.மாநகரசபையின் சைவ சமய விவகாரக்குழு இவ்வாண்டு முதல் யாழ் விருது வழங்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

முதலாவது விருது சைவ சமய விவகாரக் குழுவின் முன்னாள் தலைவர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரனுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ந)

## வட - கிழக்கிற்குச் செல்லாதீர் கனடா எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என கனேடியர்களுக்கு அந் நாட்டு அரசாங்கம் பாதுகாப்பு எச்சரிக்கையை செய்துள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் வவுனியா போன்ற இடங்களுக்குச் செல்லும் கனேடியர்களுக்கு இந்த எச்சரிக்கையை கனேடிய அரசாங்கம் விடுத்துள்ளது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மோதல் இடம்பெறுவதே கனேடிய அரசின் எச்சரிக்கைக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. (ந-5)

## நோர்வேயின்...

குழுவின் செயலாளர் எஸ். பரமநா தன் பௌயரிடம் மகஜர் ஒன் றினைக் கையளித்தார்.

இந்த சந்திப்பின் பின்னர் ஊட கவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த பௌயர் யாழ்ப்பாணத்திற்கு முதல் தடவையாகத்தான் வருகை தந்துள்ளதாகவும் இவ் வருகை தனது வேலைத்திட்டத்திற்கு பெரும் உதவியாக அமைவதுடன் இக்கால சூழ்நிலையில் யாழ்.நிலைவரங்களை அறியக்கூடியதாக இருந்ததாகவும் தெரிவித்தார்.யாழ்.செயலகத்திலிருந்து உதயன் பணிமனைக்கு சென்று அங்கு இடம் பெற்ற தாக்குதல் சம் பவத்தை கேட்டறித்தார்.

இதேவேளை நல்லூர் கோவில் வீதியிலுள்ள கண்காணிப்புக்குழுவின் மாவட்ட அலுவலகத்திற்கு சென்று குடாநாட்டு நிலைமைகள் குறித்தும் ஆராய்ந்தார்.

நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பா ணத்திலிருந்து கிளிநொச்சி சென் றடைந்த பௌயர் தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தினரை சந்தித்து கலந்துரையாடினார். இதேவேளை இன்று காலை 9 மணிக்கு விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர் மட்டக் குழுவினரை சந்திக்கவுள்ளார். (ந-5,133)

## திருமலையில் வர்த்தகர் கொலை

திருகோணமலையில் இனந்தெரியாதோரால் வர்த்தகர் ஒருவர்சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்றுப் பிற்பகல் 1.40 மணியளவில் புதிய கோபாலன் வணிக நிலையத்திற்குச் சென்ற இனந்தெரியாத இருவர் அங்கிருந்த வர்த்தகரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். கொல்லப்பட்டுள்ளவர் கோபாலன் வணிக நிலைய உரிமையாளர் துரைராஜா மயூரன் (வயது-30) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ந-5)

## மூதூர் மக்களுக்கு ச.செ.சங்கம் உதவி

மூதூரில் இதுவரை நடந்து வந்த சண்டை முடிபுக்கு வந்துள்ளதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு விநியோகத்தை ஆரம்பித்துள்ளதாகவும் தற்போது கிடைக்கப் பெறும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் தகவல்களின்படி 18 ஆயிரம் முஸ்லிம் சிங்கள மக்கள் மற்றும் 15 ஆயிரம் தமிழ் மக்களும் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

மூதூரில் நேற்று சனிக்கிழமை ஒரே ஒரு எறிகணை மட்டுமே வீழ்ந்து வெடித்ததாக கந்தளாய் வந்தடைந்த பொதுமகன் ஒருவர்தெரிவித்தார்.

தற்போது கிடைக்கப்பெறும் தகவல்களின்படி இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் மூதூருக்குச் சென்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## திருமலை கல்லாறில் 30 தமிழர்கள் கைது

திருமலை கல்லாறுப் பகுதியில் படையினரால் மூதூரைச் சேர்ந்த 30 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.நேற்று பிற்பகல் 12.30 மணிக்கு உன்கோர் நிறுவனத்தின் வழித் துணையுடன் நான்கு பேருந்து வண்டிகளில் சென்று கொண்டிருந்த 300 வரையிலான தமிழர்களை கந்தளாய் கல்லாறுப் பகுதியில் வழிமறித்து கடுமையாகத் துன்புறுத்திய படையினர் இவர்களில் 30 பேரை கைது செய்துள்ளனர். (ந-5)

## கைப்பற்றிய மூதூரை...

காரணமாகவே அரச முகாம்கள்மீது எமது தாக்குதல்களை நாம் ஆரம்பித்திருந்தோம். திட்டத்தின்படி எமது தாக்குதல் நடவடிக்கைகளை நாம் நடத்திவிட்டு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் எமது நிலைகளுக்குத் திரும்பியுள்ளோம்.

இந்தத் தாக்குதல்களின் போது மகிந்தபுரம், செல்வநகர், கட்டைப்பறிச்சான், மூதூர்ப் பகுதிகளில் இருந்த பெருமளவிலான முகாம்கள்மீது எமது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.அந்தப் பகுதிகளில் உள்ள முகாம்கள் அழிக்கப்பட்டன.

இதில் 150ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் அவர்களுடைய படைக்கலங்கள் பாரியளவில் அழிக்கப்பட்டிருக்கின்றன. இத் தாக்குதல்களின் போது எம்மால் பெருந் தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மூதூர்ப் பகுதிகளில் இருக்கின்ற மக்களில் பெருமளவானோர் இடம்பெயர்ந்திருந்தார்கள். அந்த மக்களை மீண்டும் தமது இடங்களில் வந்து இருப்பதற்காக எமது நிலைகளுக்கு நாம் திரும்பியுள்ளதுடன் பொதுமக்கள் அந்தப் பகுதியில் இருக்கலாம் என்பதையும் தெரியப்படுத்தியுள்ளோம்.

இந்தத் தாக்குதல்களின் போது அவர்களுக்குப் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. உடனடி நிவாரணப் பணிகள் செய்வதற்காக பொது நிறுவனங்கள் அந்தப் பகுதியை நோக்கி வருவதற்குத் தயார் நிலையில் இருக்கின்றன.

ஆனால் படையினர் தமது தாக்குதல் நடவடிக்கைகளை தொடர்ந்து கொண்டே இருக்கின்றார்கள். இப்போதும் ஆட்லறி எறிகணை வீச்சுத் தாக்குதல்கள், விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள், பல்குழல் பீரங்கித் தாக்குதல்கள், கடற்படைத் தாக்குதல்கள் என்பன தொடர்ந்தும் இந்தப் பிரதேசங்களை நோக்கி மேற்கொள்ளப்பட்டு வருவதால் பொது அமைப்புக்களின் வருகை தடைப்பட்டுள்ளது.

மூதூர்ப் பிரதேசத்தினைப் பொறுத்தவரை அதனுடைய பள்ளிவாசல் பிரதிநிதிகளுடன் நான் தொடர்பு கொண்டிருந்தேன். அவர்கள் சரியான உறுதிமொழி கிடைக்கும்பட்சத்தில் அங்கே வர முடியும் என்று தெரியப்படுத்தியுள்ளார்கள்.

எமது இலக்குகளை அடைந்து விட்டு தாக்குதல்களை நிறுத்தி எமது நிலைகளுக்கு வந்திருக்கின்றோம்.

எனவே உங்களுடைய பிரதேசங்களுக்கு வந்திருக்கலாம் என்கின்ற தகவலைக் கூறியிருக்கின்றோம்.

தாக்குதல்கள் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே இராணுவ முகாம்களுக்கு அருகில் இருப்பவர்களை வெளியேறுங்கள் என்ற தகவலை முன்பு தெரியப்படுத்தியிருந்தோம் என்றும் எழிலன் கூறினார். (ந-5)

## மரண அறிவித்தல்



04.08.2006 இல் இறையடி சேர்ந்த
எமது அன்புத் தெய்வம்

### பொன்னுத்துரை கணேசமூர்த்தி

(முகாமையாளர், மக்கள் வங்கி, காங்கேசன்துறை)

அவர்களின் இறுதி நிகழ்வுக்ள் 06.08.2006 இன்று காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும் என் பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

54/3, பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

## இயல்பு...

- சம்பந்தப்பட்டவர்கள் பேச்சு வார்த்தைக்கு உடன்படவேண்டும்.
- அரசியல் தீர்வு ஒன்றுக்கான பேச்சு நடத்தப்பட வேண்டும்.
- சமாதானச் சூழல் உருவாக்கப்படல் வேண்டும் என்ற ஐந்து கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றும் தம்மால் பௌயரிடம் கையளிக்கப்பட்டதாக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார். (ந-5)

## அரச...

போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கின்ற தற்போதைய சூழ்நிலையில் எமது எந்தவொரு இராணுவ நடவடிக்கையும் அதன் இலக்கை அடையும் வரையான மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையாகவே இருக்கும்.

எமது தற்காப்பு இராணுவ நடவடிக்கை முற்றுப் பெற்று எமது படைகள் பெப்ரவரி 22.2002 ஆம் திகதி அமுலிற்கு வந்த போர் நிறுத்த ஒப்பந்தத்தின்போதான நிலைகளுக்கு மீண்டுள்ளன.

தற்போது சிறிலங்காப் படைகள் வெருகல் ஆற்றுப் பகுதியில் மேற்கொள்ளும் எறிகணைத் தாக்குதல்கள் மற்றும் குண்டு வீச்சுக்கள் மிகவும் கோபமூட்டும் ஒரு நடவடிக்கை. இது விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்திற்கு தவறான செய்தியை அனுப்புகிறது என்றார் இளந்திரையன். (ந-5)


## சொலெக்ஸ் ஒப்ரிக்கல்ஸ்

'யாழ்.நகரில் கொம்பியூட்டர் மூலம் கண் பரிசோதனை'



வாடிக்கையாளர்களின் நன்மை கருதி இலகுவான முறையில் கொம்பியூட்டர் மூலம் கண்களை மிகவும் துல்லியமாகவும் தெளிவாகவும் பரிசோதனை செய்து உடனுக்குடன் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

Rim Less, Half Rim Less பிறேம்களில் கண்ணாடி செய்து பெற்றுக் கொள்ளவும்.

T.P. 021 222 7631

சொலெக்ஸ் ஒப்ரிக்கல்ஸ்
516, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D. முன்பாக)
யாழ்ப்பாணம்.

(e-அ-491)



## பதவி வெற்றிடம்

### பொது முகாமையாளர்

35–55க்கு வயதிற்குட்பட்டவர்கள் (மும்மொழித் தொடர்பாடல் உள்ளவர்களுக்கும் முகாமைத்துவ அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்)

விண்ணப்பங்களை 12.08.2006க்கு முன்னதாக நிர்வாக உத்தியோகத்தர், வலம்புரி, இல. 3, 2 ஆம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி.



## உடன் தேவை

### பத்திரிகை விநியோகஸ்தர்கள்

சொந்தமாகமோட்டார்சைக்கிள் வைத்திருப்பவர்கள் நேரில் வரவும்.

இல. 3.2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி ,
யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.